
20th
May
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 31 | பக்கங்கள் - 15 | editor.uthayam@gmail.com



# ரைசியின் ஜனாஸா நாளை நல்லடக்கம்

## ஐந்து நாள் துக்கம் அனுஷ்டிப்பு

## தெஹ்ரானில் திரளும் இலட்சக்கணக்கான மக்கள்







ஹெலி விபத்தில் மரணமடைந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் இறுதிக் கிரியைகள் நாளை செய்வாய் கிழமை தெஹ்ரானில் பூரண அரச மரியாதைகளுடன் நல்லடக்கம் செய்யப்படவுள்ளதாக அந் நாட்டு அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ரைசியின் ஜனாஸா அவரின் சொந்த ஊரான மசாத் எனும் புனித நகரில் தற்போது வைக்கப்பட்டுள்ளது. தமது தலைவருக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு திரண்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இறுதிக் கிரியைகளுக்காக அங்கிருந்து அவரது ஜனாஸா தெஹ்ரானுக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.


இதேவேளை ஜனாதிபதி ரைசியின் மறைவையொட்டி அங்கு ஐந்து நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

உலக நாடுகள் பலவற்றிலும் நாளை துக்கம் அனுஷ்டிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலட்சக்கணக்கான ஈரானியர்கள் தெஹ்ரானில் ஒன்று திரண்டிருப்பதாகவும் சோகம் தாங்க முடியாமல் மக்கள் கதறியழுத வண்ணம் தமது தலைவருக்காக பிரார்த்தனைகள் புரிந்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



1979 இஸ்லாமிய புரட்சியின் போது இப்ராஹிம் ரைஸி



உமா ஓயா திறப்பு விழாவின் போது சிறுவனை முத்தமிடும் ஈரான் ஜனாதிபதி

## ஹெலி விபத்தில் உயிரிழந்தோர் விபரம்!

ஹெலிகொப்டர் விபத்தில் ஈரானின் ஜனாதிபதியும் வெளியுறவு அமைச்சரும் உயிரிழந்துள்ளதாக அரசுடன் தொடர்புடைய செய்தி நிறுவனமான ஆநுஉசு தெரிவித்துள்ளது.

அதன்படி குறித்த ஹெலிகொப்டர் விபத்தில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உள்ளிட்ட அனைவரும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் விபரங்களும் வெளியிடப்பட்டுள்ளது.

1. அயதுல்லா செய்யத் இப்ராஹிம் ரைஸ் அல் சதாதி
2. அயதுல்லாஹ் செய்யத் முஹம்மது அலி அல்–ஹாஷிம்
3. வைத்தியர் ஹொசைன் அமிரப்துல்லாஹியன்
4. வைத்தியர் மாலிக் ரஹ்மதி
5. சர்தார் செயத் மெஹ்தி மௌசவி
6. அன்சார் அல்–மஹ்தி கார்ப்ஸ் (அடையாளம் தெரியவில்லை)
7. பைலட் (அடையாளம் தெரியவில்லை)
8. விமானியின் உதவி, (அடையாளம் தெரியவில்லை)
9. க்ருச்சேவ் (அடையாளம் தெரியவில்லை)



துக்கம் தெரிவிப்பதற்காக திரண்டுள்ள பல்லாயிரக் கணக்கான மக்கள்

## இலங்கையில் நாளை துக்க தினம்

ஈரான் ஜனாதிபதியின் மறைவையொட்டி நாளை (21) தேசிய துக்க தினமாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாளைய தினம் அனைத்து அரச நிறுவனங்களிலும் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறு பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

# ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மரணம் தொடர்பில் இலங்கை ஆழ்ந்த அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்துள்ளது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரங்கல்



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மரணம் தொடர்பில் இலங்கை ஆழ்ந்த அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, வெளிவிவகார அமைச்சர் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் பிற மூத்த ஈரானிய அதிகாரிகளின் துயர மரணத்தால் இலங்கை ஆழ்ந்த அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்துள்ளது. அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், அரசுக்கும், ஈரான் மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என ஜனாதிபதி தனது X தளத்தில் தெரிவித்துள்ளார்.

# கவலை நிறைந்த இந்த சந்தர்ப்பத்தில் இலங்கைக்கான விஜயத்தை நினைவு கூருகிறேன்

## ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு அமைச்சர் அலி சப்ரியின் அனுதாபம்



ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி மற்றும் வெளியுறவு அமைச்சர் அமீர் அப்துல்லாஹியன் ஆகியோர் ஹெலிகாப்டர் விபத்தில் அகால மரணமடைந்த செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தனது ஓ வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எமது நாடுகளுக்கிடையிலான பல விஜயங்கள், இருதரப்பு சந்திப்புகள் மற்றும் ஜனாதிபதி ரைசி இலங்கைக்கு மேற்கொண்ட அண்மைய விஜயத்தினையும் இத் தருணத்தில் நினைவுகூருகின்றேன்.

மரணித்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், இந்த இக்கட்டான நேரத்தில் ஈரான் மக்களுடன் இலங்கை துயர் பகிர்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நெதன்யாஹூவுக்கு பிடியாணை



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ காஸாவில் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக அவர் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து, இஸ்ரேல் பிரதமருக்கு பிடியபாணை பிறப்பிக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ, அந்நாட்டின் பாதுகாப்புத்துறை

04ம் பக்கம்பார்க்க...

# ஜூன் 6ல் சஜித்துடன் விவாதத்துக்கு தயார்

## அனுர குமார அதிரடி

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் விவாதத்திற்கு தான் தயாரென தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதம் 6 ஆம் திகதி இவ் விவாதத்தை வைத்துக் கொள்ள முடியுமென்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கு அவர் அறிவித்துள்ளார். கட்சித் தலைவர்களுக்கிடையிலான விவாதத்தை ஜூன் 3 முதல் 7 வரையிலான காலப்பகுதியில் வைத்துக் கொள்ள முடியுமென ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்திருந்தது. இதன் பிரகாரம் ஜூன் 7 ஆம் திகதி விவாதத்தை வைத்துக் கொள்ள முடியுமென தேசிய மக்கள் சக்தி நேரம் குறித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# எந்த தேர்தலையும் எதிர்கொள்ள நாம் தயார்

## மஹரகம கூட்டத்தில் அனுர அதிரடி

ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல் என்ற வேறுபாடில்லை. எந்த தேர்தலுக்கும் நாங்கள் தயார்.வெற்றியோ, தோல்வியோ அதனை நாங்கள் எதிர்கொள்வோம்.

எந்த தேர்தல் முதலில் நடத்த வேண்டும் என்று பொதுஜன பெரமுன

04ம் பக்கம்பார்க்க...



# வடமேல் மாகாணத்தில் 4000 ஆசிரியர்கள் நியமனம்

## ஆளுநர் நஸீர் துரித நடவடிக்கை!



வடமேல் மாகாணத்தின் குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் 4,000 பட்டதாரி ஆசிரியர்களின் நியமிக்க வடமேல் மாகாண ஆளுநர் ஹாபீஸ் நசீர் அஹமட் நடவடிக்கை எடுத்துள்ளார். இரு வாரங்களுக்கு முன் பதவியேற்ற நசீர் அஹமட் உடனடியாக இந்த ஆசிரியர் நியமன வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளை பணித்துள்ளார்.

அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஜூன் மாதத்திற்கு முன் இந்த நியமனங்கள் வழங்கப்படுமென ஆளுநர் நசீர் அஹமட் உதயத்துக்கு தெரிவித்துள்ளார்.

# தேர்தல்களுக்கு பயந்து திணறும் மொட்டு

## எத் தேர்தலுக்கும் நாம் தயார்!

## முஜிபுர் ரஹ்மான் எம்.பீ.



பல பிரிவுகளாக மொட்டுக் கட்சி பிரிந்துள்ளதால் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலை எதிர்கொள்ள அவர்கள் தயங்குகின்றனர்.

எனினும் ஐக்கிய மக்கள் சக்தி எந்தத் தேர்தலையும் எந்த நேரத்திலும் எதிர் கொள்ள தயாராக இருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

04ம் பக்கம்பார்க்க...

# இலங்கையில் இஸ்லாமிய தீவிரவாதம் இன்னும் ஒழியவில்லை

## முஸ்லிம் கல்வி நிலையங்களில் தீவிரவாதம் போதிக்கப்படுகிறது

## மீண்டும் குட்டையை கிளறும் மதுர விதானகே எம்.பி.



ஹமாஸ் தலைவர்களை முஸ்லிம் நாடுகள் பாதுகாக்கின்றனர். முஸ்லிம் தலைவர்கள் இந்த அமைப்புக்கு உதவி வருகின்றார்கள். இலங்கையில் சில முஸ்லிம் கல்வி நிலையங்களில் இஸ்லாமிய தீவிரவாதம் போதிக்கப்படுகின்றது.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு கடும்நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் இந்த

03ம் பக்கம்பார்க்க...

# பொதுத் தேர்தலை நடத்த ரணில் மொட்டு இணக்கம்

## அரசு எதிர்க் கட்சியினரும் உறுதியான கருத்து

## தேர்தல் ஆணையாளரும் தயாரென தெரிவிப்பு



ஒக்டோபர் மாதம் நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் பொதுஜன பெரமுணவிற்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக நம்பத் தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசு தரப்பிலும் எதிர்க்கட்சி தரப்பிலும்

03ம் பக்கம்பார்க்க...

# 36 மணித்தியாலங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

## வளிமண்டலவியல் திணைக்களம்

கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கையை வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள புதிய அறிவித்தலில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேல் மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகளவான கனமழை

03ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

## இலங்கையில்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

விடையங்களுக்கு அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். உள்நாட்டு விவகாரங்கள் இருக்கும்போது நாம் ஏன் வெளிநாட்டு விவகாரங்களில் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும் என்பது கேள்வியாக உள்ளது என்றும் விதானகே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இஸ்லாமிய தீவிரவாதம் முழுமையாக தோற்கடிக்கப்படவில்லை என கொழும்பு மாவட்ட பொதுஜன பெரமுண பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் பலஸ்தீன யுத்தத்தை நிறுத்தக்கோரி சமர்ப்பிக்கப்பட்ட விவாதத்தில் பேசுகையிலே அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது ”சுதந்திரநாடு என்ற வகையில் வெளிநாட்டு விவகாரங்களை கையாளும்போது நாம் மிகவும் கவனமாக செயல்பட வேண்டும். உலக நாடுகள் விவகாரத்தில் ஏனைய சுதந்திர நாடுகள் வளர்ந்து வரும் பயங்கரவாதத்தையும் தீவிரவாதத்தையும் கட்டுப்பாட்டிட்குள் கொண்டு வருவதற்கு பெரும் முயற்ச்சிகள் எடுத்து வருகின்றன. நாம் உலகின் மிக முக்கிய பயங்கர இயக்கமான LTTE ஐ தோற்கடித்தோம். ஆனால் இலங்கையில் மீண்டும் இஸ்லாமிய தீவிரவாதம் தலைதூக்கி வருகின்றது. இவ்வாறான தீவிரவாத சக்திகள் தலைதூக்க இடமளிக்கக்கூடாது. இலங்கையில் இஸ்லாமிய கல்வியில் தீவிரவாதம் முற்றாக தோற்கடிக்கப்படவில்லை. அரசியல் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பொதுத்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

பொதுத் தேர்தலே நடக்கும் என உறுதியாக தெரிவித்து வருகின்றனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் உறவினரும் முன்னாள் ரஷ்ய தூதுவருமான உதயங்க வீரதுங்க ஜ"ன் மாதம் 12ம் திகதி அல்லது 15ம் திகதி கட்டாயமாக பாராளுமன்றம் கலைக்கப்படும் என்று தொலைக்காட்சி சேவை ஒன்றிற்கு தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பாராளுமன்றத் தேர்தலுக்கு இணக்கம் காணப்பட்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். அவர் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட மாட்டார் என்றும் தெரிவித்துள்ளார். இதே நேரம் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயல்படும் பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் தலைமையிலான அணியின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் முன்னாள் அமைச்சர் திலான் பெரேரா ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என உறுதியாக தெரிவித்துள்ளார். சில தினங்களுக்கு முன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உடன் பாராளுமன்றத்தில் இருக்கும் இரு அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நான்கு பேருடன் நடத்திய பேச்சுவார்த்தையில் இதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதே நேரம் எதிர்வரும் மே 22 ஆம் திகதி மட்டும் பாராளுமன்றம் கூடவுள்ளது, ஜனாதிபதி தேர்தலுக்கு முன் பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் அதனை தாம் நடத்துவதற்கு தயாராக இருப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

## 38...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

பெய்யக்கூடும் என அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சப்ரகமுவ மாகாணம், காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கிடையில், மழையுடன், நீர்த்தேக்கங்கள் மற்றும் ஆறுகளின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

களனி கங்கை, மகாவலி கங்கை, நில்வலா கங்கை மற்றும் கிங் கங்கையை ஒட்டியுள்ள தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் உள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், தெதுரு ஓயா, மஹா ஓயா, அத்தனகலு ஓயா, பெந்தர கங்கை, கிரம ஓயா, உரு பொக்கு ஓயா, கலா ஓயா மற்றும் மல்வத்து ஓயா ஆகிய கரைகளை சுற்றியுள்ள தாழ்நிலங்களும் வெள்ள அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.


## ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 27வது வருடாந்த மாநாடு

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 27வது வருடாந்த மாநாடு 2024 ஜ"ன் மாதம் 30ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இதன் போது 2024/25இற்கான புதிய செயற்குழு தெரிவு செய்யப் படவுள்ளது.

புதிய செயற்குழுவை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தலைவர் (01), செயலாளர் (01), பொருளாளர் (01), செயற்குழு உறுப்பினர்கள் (15) ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**விண்ணப்ப முடிவுத்திகதி : 15.06.2024**

மேலதிக விபரங்களை செயலாளர், 41/2, விஜித ரோட், நதிமால, தெஹிவளை என்ற முகவரியிலோ அல்லது NM.அமீன் (தலைவர்) அவர்களை 0772612288 என்ற தொலைபேசி இலக்கத்திலோ தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**ஷிஹார் அனீஸ்**
**பொதுச்செயலாளர் – ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம்**
**25.04.2024**







## எந்த...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தீர்மானிக்குமாயின் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு எதற்கு. பாராளுமன்றத்தைக் கலைப்பது ஜனாதிபதி சாதகமாக அமையாது எனத் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மஹரக பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (19) இடம்பெற்ற ஓய்வூதியலாளர்களின் தேசிய மாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு அதேபோல் எதிர்வரும் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதமளவில் ஜனாதிபதி தேர்தலை நடத்தும் அதிகாரம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உண்டு.ஆகவே இவ்விரு தேர்தல்களும் நிச்சயம் வெகுவிரைவில் இடம்பெறும்.

பாராளுமன்றம் எப்போது கலைக்கப்படும் என்பது தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும்,பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டிய பஷி ்ல் ராஜபக்ஷவுக்கும் இடையில் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. பதவி காலம் நிறைவடையும் வரை பதவியில் இருக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பாரே தவிர பதவி காலத்தை வரையறுத்துக்கொள்ளமாட்டார்.

ஜனாதிபதி வசமுள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களான பிரசன்ன ரணதுங்க,காஞ்சன விஜேசேகர,செஹான் சேமசிங்க உட்பட பெரும்பாலானோர் ஜனாதிபதியை விட்டு மீண்டும் பொதுஜன பெரமுன பக்கம் செல்வார்கள்.

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டால் அது ஜனாதிபதி தேர்தலுக்கும் செல்வாக்கு செலுத்தும்.பொதுத்தேர்தலின் பெறுபேறுகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மக்களாணையின் பலத்தை உறுதிப்படுத்தும் ஆகவே

பொதுத்தேர்தலுக்கு சென்றாலும் செல்லாவிட்டாலும் ஜனாதிபதி நெருக்கடிக்குள்ளாகுவார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தும் தேவை பஷில் ராஜபக்ஷவுக்கு உண்டு.ஜனாதிபதி தேர்தலில் களமிறக்க வேட்பாளர் ஒருவர் ராஜபக்ஷர்களிடம் இல்லை என்பதால் அவர்கள் பொதுத்தேர்தல் குறித்து அக்கறை கொண்டுள்ளார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் வெற்றிப் பெற்றால் ராஜபக்ஷர்களின் அரசியல் அத்துடன் நிறைவடையும் என்பதை ராஜபக்ஷர்கள் நன்கு அறிவார்கள். பண்டாரநாயக்கர்களின் அரசியல் செல்வாக்கை மஹிந்த ராஜபக்ஷ பெற்றுக்கொண்டதை தொடர்ந்து பண்டாரநாயக்கர்களின் அரசியல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது,ஆகவே இது போன்ற நிலை பொதுஜன பெரமுனவுக்கும் ஏற்படுமா என்ற அச்சம் ராஜபக்ஷ ர்களுக்கு உண்டு. ஆகவே, ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதை ராஜபக்ஷ குடும்பம் விரும்பவில்லை.தயார். வெற்றியோ,தோல்வியோ அதனை நாங்கள் எதிர்கொள்வோம். எந்த தேர்தல் முதலில் நடத்த வேண்டும் என்று பொதுஜன பெரமுன தீர்மானிக்குமாயின் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு எதற்கு என்றார்.

## தேர்தல்களுக்கு...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தற்போதைய அரசியல் நிலைமை குறித்து கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

எந்த தேர்தலை முற்படுத்துவது என்பதே அரசாங்க தரப்பினர் சிந்தித்து வருகின்றனர்.

மொட்டு பல பிரிவுகளாக பிரிந்துள்ளனர். அவர்களுக்கு சாதகமான நிலை ஏற்படும் வரை தேர்தலை நடத்த பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

ரணில் விக்ரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதை பசில் உணர்ந்துள்ளார். அதன் வெளிப்பாடே இந்த பாராளுமன்ற கலைப்பு விடயம்.

மொட்டு ராஜபக்ஷ குடும்பத்தின் சொத்து. ராஜபக்ச குடும்பத்தை பாதுகாக்க எந்த தேர்தல் சரியானது என்பதே அவர்களுக்கு இன்றுள்ள பிரச்சினை. மொட்டுவின் அடுத்த தலைவராக நாமலை கொண்டு வரவே வியூகங்களை வகுத்து வருகின்றனர். அதனாலயே சிரேஷ்ட உறுப்பினர்கள் இருக்கத்தக்க நாமலை தேசிய அமைப்பாளராக நியமித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தி எந்த தேர்தலுக்கும் தயார். நாம் வெற்றி பெறுவோம். பாராளுமன்றத் தேர்தல் முதலில் நடந்தால் சஜித் பிரேமதாசவை பிரதமராக்குவோம். ஜனாதிபதி தேர்தல் முதலில் நடந்தால் சஜித் பிரேமதாசவை ஜனாதிபதியாக்குவோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வேட்புமனுக்களை இரத்துச் செய்யும் எந்த அதிகாரமும் அமைச்சரவைக்கு இல்லை. இது ஜனநாயக உரிமை மீறலாகும்.

தேர்தலை நடத்த பணம் இல்லை எனக் கூறிக கொண்டு, தனது சொந்த வாக்குகளை பெருக்கிக் கொள்ள, 24 வருடங்களுக்கு முன்னர் மரணித்த ஶ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் ஞாபகார்த்த அருங்காட்சியகத்தை துரிதமாக நிர்மானிக்க வாக்குகளை பெறுவதற்கு வரிப்பணத்தை ஒதுக்கியுள்ளார். இது எதனை உணர்த்துகிறது.

அவருடைய குடும்பம் இதை கோரவில்லை. அவருடைய குடும்பத்தினருக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை.

நீதிமன்ற தீர்ப்பை மதிக்காத போக்கையே ஜனாதிபதி காட்டி வருகிறார். நாட்டை வங்குரோத்தாக்கியவர்கள் தொடர்பான தீர்ப்பு, பிரஜா உரிமை தொடர்பான டயனாவின் தீர்ப்புகளை அரசாங்கமும் ஜனாதிபதியும் கவனத்தில் கொள்ளாது கிடப்பில் போட்டுள்ளனர்.

சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சி கண்டுள்ளதாக சர்வதேச நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. அரசாங்கம் இதை தொடர்ச்சியாக நிரூபித்து வருகிறது.

மருதானை பிரதேசத்தில், வறிய மக்களின் தேவைக்காக நிர்மானிக்கப்பட்ட 20 கோடி பொறுமதியான சனசமூக நிலையத்தை அரசாங்க தரப்புக்குச் சொந்தமானவர்கள் கையகப்படுத்தி வருகின்றனர். இது அநீதி.

கொழும்பில் வெள்ளம், மினசார இணைப்புகளில் மரம் சரிந்து விழுவதால் ஏற்படும் உடனடி பாதிப்புகளுக்கு மாநாகர ஆணையாளர் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காது அசமந்தமாக செயற்பட்டு வருகிறார். உள்ளூராட்சி மன்றங்கள் இயங்காததால் பௌதீக கட்டுமானங்கள், பராமரிப்புகள் சரியாக மேற்கொள்ளப்படாமை குறித்து அரசாங்கத்திற்கு எந்த பொறுப்பும் இல்லாது போல் செயற்பட்டு வருகின்றன. மக்கள் குறித்த எந்த சிந்தனையும் இந்த அரசாங்கத்திற்கு இல்லை.

## நெதன்யாஹுவுக்கு...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அமைச்சர் யோவ் கேலண்ட் மற்றும் ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர்களான இஸ்மாயில் ஹனியே, யேயா சின்வார், முகமது டெய்ஃப் ஆகியோர் காஸா மற்றும் இஸ்ரேலில் பல்வேறு போர்க்குற்றங்களில் ஈடுபட்டதற்கு பொறுப்பேற்க வேண்டுமென சர்வதேச குற்றவியல் நீதிமன்ற முதன்மை வழக்குரைஞர் கரிம் கான் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு தேவையான உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் தடை செய்வதன் மூலம், மக்களை தவிக்கச்செய்வதை போர்க்கால உத்தியாகக் கையாள்வதாகவும் இஸ்ரேல் மீது அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இதன் காரணமாக, பாலஸ்தீன பச்சிளங் குழந்தைகள், சிறுவர்கள் பெண்கள் ஆகியோர் அதிகளவில் உயிரிழந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த கொடுமைகளுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

பிராந்திய நிருபர்களுக்கான
திறந்த விண்ணப்பம்

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

பத்திரிகைத் துறையில் முன்னனி வளர்ச்சியை எட்டியிருக்கும் உதயம் பத்திரிகைக்கு பிராந்திய நிருபர்கள், சுயாதீன ஊடகவியலாளர்களுக்கான உத்தியோகபூர்வ அங்கத்துவம் வழங்கப்படவுள்ளது.
எனவே, ஆர்வமுள்ளவர்கள் கீழ்காணும் மின்னஞ்சல் முகவரியூடாக அல்லது வட்ஸ்அப் ஊடாக தங்களது சுயவிபரக் கோவையை எதிர்வரும் ஜுன் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

மின்னஞ்சல்:
moonmedia178@gmail.com

Whatsapp / Call:
070 239 7210

Moon Media (Pvt) Ltd
41/2, Vijitha Road,
Nadhimala, Dehiwala.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 MAY 20 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# புதை குழிகளிலும் பலஸ்தீனர்களை கொடுமைப்படுத்தும் கொடூரம்

பலஸ்தீனில் இஸ்ரேலியர்கள் மேற்கொண்டுவரும் கொடூர யுத்தம் காரணமாக 604 பள்ளிவாசல்கள் அழிக்கப்பட்டு, 1000 புதைகுழிகளிலிருந்து ஜனாஸாக்கள் திருடப்பட்டுள்ளதாக காஸாவின் அவ்காஃப் மதவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. பலஸ்தீன் மீதான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில் ஆயிரம் ஜனாஸாக்கள் திருடப்பட்டுள்ளதோடு பல தேவாலயங்களும் அழிக்கப்பட்டுள்ளதாக அவ்காஃப் அமைச்சின் அறிக்கை தெரிவித்துள்ளது.

21ஆம் நூற்றாண்டின் மிகப்பெரும் பேரழிவாக இதனைக் குறிப்பிடலாம். பிணக்காடாக மாறியுள்ள காஸாவில் 60 புதைகுழிகளை இழிவுபடுத்தி, இறந்தவர்களின் ஆயிரத்திற்கும் மேற்பட்ட உடல்களை திருடி, மிருகத்தனமாக செயல்பட்டுள்ள கொடுங்கோல் இஸ்ரவேலர்கள் ஜனாஸாக்களை சிதைத்தும் உள்ளனர்.

உயிர் வாழும் பாலஸ்தீனர்களுக்கு வாழ்வதற்கு இடமளிக்காத இஸ்ரவேலர்கள் மரணித்த பாலஸ்தீனர்களுக்கு செய்யும் இந்த அட்டூழியங்கள் குறித்து மனிதாபிமானத்தை மதிக்கும் சர்வதேச அமைப்புக்கள், உலகத் தலைவர்கள், ஏன் அயலில் உள்ள முஸ்லிம் நாடுகள் பேசாது இருப்பதுதான் கவலையளிக்கின்றது.

இந்தச் செய்தியைக்கேட்டு முஸ்லிம் நாடுகளில் உள்ளவர்கள் நிம்மதியாக தூங்க முடியுமா என்ற கேள்வியை நாங்கள் எழுப்புகின்றோம்.

இந்தப் பின்னணியில் பலஸ்தீன் யுத்தம் தொடர்பாக ஆறு மாத காலத்திற்குள் இலங்கை பாராளுமன்றத்தில் இரண்டாவது முறை யுத்தநிறுத்தத்தை கோரி பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளும் கலந்து கொண்ட விவாதம் ஒன்று கடந்தவாரம் பாராளுமன்றத்தில் இடம் பெற்றது. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சகல கட்சிகளின் பிரதிநிதிகளும் உடனடியாக யுத்தம் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி உரையாற்றியுள்ளார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹகீம் பிரேரித்த இந்த பிரேரணை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகீர் மாக்கார் வழிமொழிந்துள்ளார். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல தரப்பினரும் யுத்தநிறுத்தத்தின் அவசியத்தைப் பற்றி வலியுறுத்திய போதும், பொதுஜன பெரமுணவின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே மட்டும் மாற்றமான கருத்துக்களை முன்வைத்திருந்தார். (இது புறம்பான இடத்தில் செய்தியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது). சுதந்திரப் பலஸ்த்தீனம் உருவாக்கப்படுவதன் அவசியத்தை இங்கு உரையாற்றிய அரச, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆணித்தரமாக வலியுறுத்தி இருக்கின்றார்கள். இலங்கையின் பலஸ்தீன ஒருமைப்பாட்டு இயக்கம், பலஸ்தீன ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பு என்பவற்றில் முயற்சியாலே இந்த கவன ஈர்ப்பு பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தின் சகல கட்சிகளினதும் ஆதரவில் இப்பிரினை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை வாழ்மக்களில் பெரும்பான்மையினர் பலஸ்தீன யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என ஏகமனதாக குரல் எழுப்பியதே பாராளுமன்ற உறுப்பினர்களது இந்தவிவாதம் உறுதிப்படுத்தியுள்ளது. உலகில் எங்கெல்லாம் ஜனநாயகம், பேச்சுரிமை மீறப்படும் போது அதற்காக குரல் கொடுக்கும் ஐக்கிய அமெரிக்கா உட்பட மேற்குநாடுகள் இந்த அழிவுகளுக்கு குரல் கொடுக்காதிருப்பது கவலை தருகிறது.

மேற்கு நாடுகளின் பல்கலைக்கழக மாணவர்கள் தொடராக மேற்கொண்டுவரும் ஆர்ப்பாட்டங்களும் இந்த ஆட்சியாளர்களுக்கு நிச்சயம் பதிலளிக்க வேண்டிய காலமும் வெகு தூரத்தில் இல்லை என்பதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

# ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் அனுதாபம்!




ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைஸி, ஈரானிய வெளிவிவகார அமைச்சர், தப்ரிஸ் மஸ்ஜிதின் இமாம் மற்றும் கிழக்கு அஜர்பைஜான் ஆளுநர் உள்ளிட்ட குழுவினர் ஹெலிகாப்டர் விபத்துகுள்ளாகி பலியான துயரச் செய்திக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதாகவும், அவர்களின் அகால மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அனுதாபச் செய்தியில்,

"இந்த எதிர்பாராத துயரச் சம்பவம் ஈரான் மக்களுக்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களுக்கும் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி ரைஸி, அர்ப்பணிப்புள்ள இரக்கம் கொண்ட தலைவராக இருந்தார். ஈரான் மற்றும் இஸ்லாமிய உலகின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவர். ஈரானின் அரசியல், சமூக மற்றும் மத



விவகாரங்களில் அவரின் பங்களிப்புகள் தலைமுறை தலைமுறையாக நினைவுகூரப்பட்டு போற்றப்படும்.

மேலும், பாலஸ்தீன மண்ணுக்காகவும் மக்களின் உரிமைக்காகவும் துணிச்சலுடன் செயலாற்றியதில் ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைஸி அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. சுதந்திர பாலஸ்தீனம் உருவாக வேண்டும் என்பதில், முன்னின்று உழைத்த, துணிச்சல் மிக்க முன்னணி அரசியல் தலைவராக விளங்கியவர்

அதேபோன்று, இலங்கையானது ஈரானின் மனிதாபிமான உதவிகளை பல்வேறு சந்தர்ப்பங்களில் பெற்றுள்ளது. எங்களுக்கு தேவைகளும், பொருளாதார பிரச்சினைகளும் ஏற்பட்ட போதெல்லாம் அவர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர். அந்த உதவிகளை நாம் இன்றும் நன்றியுடன் நினைத்துப்பார்க்கிறோம். இரு நாடுகளுக்குமிடையிலான உறவு எந்த சந்தர்ப்பத்திலும் வலுப்பெறும் என்பதில் நான் உறுதியான நம்பிக்கையை கொண்டிருக்கிறேன்.

இந்த துக்ககரமான தருணத்தில், எமது பிரார்த்தனைகள் விபத்தில் மரணித்தவர்களுக்கும் அவர்களின் உறவுகளுக்கும் மற்றும் ஈரான் மக்களுக்கும் என்றுமே இருக்கும். மரணித்தவர்களுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ்! ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர்மிகு சுவனத்தை வழங்கவும், அவர்களின் அன்புக்குரியவர்களுக்கு இந்த பேரிழப்பைத் தாங்கும் வலிமையையும் பொறுமையையும் வழங்க வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறோம்.

"எந்தவொரு ஆன்மாவும் மரணத்தை சுவைத்தே தீர வேண்டும்" என்ற நியதியின் படி, இந்த இழப்பையும் பொறுத்துக்கொண்டு ஆறுதல் அடைவோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# எதிர்ப்புகளையும் மீறி ஈரானை கட்டியெழுப்பிய ரைசி



அஸ்ரப் ஏ.சமட்

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் வெளியுறவு அமைச்சர் உள்ளிட்டவர்கள் ஹெலிகாப்டர் விபத்தில் கொல்லப்பட்ட சம்பவம் முழு உலக நாடுகளையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இந்த விபத்தில் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உள்ளிட்ட ஒன்பது பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

விமான விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் இறுதிக் கிரியைகள் நாளை (21) இடம்பெறவுள்ளதாக தெஹ்ரான் டைம்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இதேவேளை, விபத்தில் உயிரிழந்த ஜனாதிபதி மற்றும் அவருடன் பயணித்த ஏனையவர்களுக்காக 5 நாள் துக்கம் அனுசரிக்கப்படும் என ஈரானின் ஆன்மீகத் தலைவர் அயதுல்லா அல் கமேனி அறிவித்துள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி பயணித்த ஹெலிகாப்டர் கிழக்கு அஸர்பைஜானுக்கு அருகிலுள்ள ஜோல்பா பகுதியில் நேற்று (19) விபத்துக்குள்ளானது.

மேலும், பாகிஸ்தான் மற்றும் லெபனான் ஆகிய நாடுகள் தேசிய துக்கத்தை அறிவித்த பிறகு, சிரிய அரசாங்கமும் தேசம் மற்றும் ஈரான் அரசாங்கத்துடனான ஒற்றுமை, தோழமை மற்றும் பச்சாதாபத்திற்கு ஏற்ப மூன்று நாட்களுக்கு தேசிய துக்கத்தை அறிவித்தது.

இதையடுத்து தகவலறிந்த மீட்பு படையினர் துரிதமாக மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். ஆனால் ரைசி பயணித்த ஹெலிகாப்டர் குறித்த தகவல் ஏதும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் சுமார் 16 மணி நேரம் கழித்து அதிபர் ரைசி பயணித்த விமானத்தின் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டது. இதனால் இந்த விபத்தில் ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி உள்பட 8 பேர் உயிரிழந்ததாக அந்த நாட்டு அரசு ஊடகங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இதையடுத்து ரைசியின் மரணத்திற்கு பல்வேறு நாட்டு ஜனாதிபதிகள், பிரதமர்கள், உள்ளிட்டோர் இரங்கலை தெரிவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் 63 வயதான இப்ராஹிம் ரைசி, அந்த நாட்டில் மிகப் பெரிய ஆளுமை திறன் கொண்டவராக இருந்தது எப்படி என்பது பார்க்கலாம். ரைசி தனது 15 ஆவது வயதிலேயே மத போதனைகளை சொல்லித் தரும் ஒரு புகழ்பெற்ற பள்ளியில் படித்தார். அந்த காலத்தில் அவர் நிறைய முஸ்லீம் அறிஞர்களிடம் பாடங்களை கற்றறிந்தார். தனது 20ஆவது வயதில் அரசு தரப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் அரசு தரப்பு துணை வழக்கறிஞராக பதவியேற்றார். பிறகு 1983 ஆம் ஆண்டு ஜமீலா அலமோல்ஹோடா என்பவரை திருமணம் செய்து கொண்டார்.







இந்த தம்பதிக்கு இரு மகள்கள் உள்ளனர். 1988 ஆம் ஆண்டு அரசியல் கைதிகளை தூக்கிடும் குழுவை மேற்பார்வையிடும் கமிட்டியில் ஒரு உறுப்பினராக 5 மாதங்கள் இருந்தார்.

இவரது செயலுக்கு கடும் எதிர்ப்பு நிலவிய நிலையில் ரைசிக்கு அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்தது. ஈரானின் முதல் தலைவர் அயோதுல்லா ருஹோல்லா கோமைனி இறப்புக்கு பின்னர் 1989 ஆம் ஆண்டு டெஹ்ரானின் தலைமை நீதிபதியாக பதவியேற்றார். கடந்த 2021 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் 62 சதவீத வாக்குகளை பெற்று ரைசி ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார்.

வெதர்மேன் அலர்ட் ஈரான் நாட்டில் ஊழலுக்கு எதிராக குரல் கொடுக்கக் கூடிய சமூக ஆர்வலர், மூத்த அரசியல் தலைவர், ஏழைகளின் நாயகன் என ரைசி அழைக்கப்பட்டு வந்தார்.

ஈரான் நாட்டில் ஊழலுக்கு எதிராக மக்களிடையே இவர் அடிக்கடி பிரச்சாரம் செய்ததால்தான் இந்த தேர்தலில் வென்றார்.

மேலும் ஊழல் செய்யும் உயரதிகாரிகள் யாராக இருந்தாலும் அவர்களுடைய பெயர், விவரங்களை பொதுவெளியில் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார் ரைசி.

கடந்த 2015 ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் அணு ஆயுத ஒப்பந்தத்தில் முன்னாள் அதிபர் ஹாசன் ரோஹானி கையெழுத்திட்டதை ரைசி கடுமையாக விமர்சித்திருந்தார். ஈரானுக்கு விதிக்கப்பட்ட பொருளாதார தடைகளை நீக்கி அதன் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்தினார். அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் எதிர்ப்பை சம்பாதித்திருந்தாலும் ஈரான் பொருளாதாரத்தை முன்னுக்கு கொண்டு வந்ததில் ரைசி சிறந்த தலைவராக கருதப்படுகிறார்.

இவ்வாறு திடம்கொண்ட ஜனாதிபதி ரைசி சாதாரணமாக ஹெலிகொப்டர் பயணத்தை நிராகரித்து வந்தவர்.

இலங்கை விஜயத்திலும்கூட ஹெலிகொப்டர் பயணத்தை நிராகரித்திருந்ததாக கூறப்படுகின்றது. கடந்த மாதம் 24 ஆம் திகதி ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு வந்திருந்த போது, ஹெலிகாப்டர் பயணத்தை முற்றிலும் தவிர்த்திருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை விஜயத்தின் போது பாதுகாப்பு மற்றும் சுயதணிக்கையின் அடிப்படையில் அவர் ஹெலிகாப்டர் பயணத்தை தவிர்த்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உள்ளிட்ட தூதுக் குழுவினர் (24.04.2024) வந்திறங்கிய விமானம் மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியது.

ஈரான் ஜனாதிபதியை மத்தள விமான நிலையத்தில் இருந்து உமா ஓயா நிகழ்வு திட்டத்தை திறந்து வைப்பதற்கு ஹெலிகாப்டர் மூலம் அழைத்துச் செல்வதற்கே முதலில் திட்டமிடப்பட்டிருந்தது.

ஏனெனில், ஈரானிய ஜனாதிபதியின் இலங்கை விஜயத்திற்கான பயண அட்டவணையின்படி, ஈரான் தரப்பு மத்தள விமான நிலையத்தில் இருந்து உமா ஓயா பகுதிக்கு பயணிக்க 20 நிமிடங்களே ஒதுக்கப்பட்டிருந்தன.

மத்தள விமான நிலையத்தில் இருந்து உமா ஓயா பகுதிக்கு இவ்வளவு குறுகிய காலத்தில் வீதி மார்க்கமாக பயணிக்க முடியாது என உள்நாட்டு பாதுகாப்பு தரப்பினர் உறுதிப்படுத்தியிருந்தனர்.

எனினும், ஈரான் ஜனாதிபதி இந்த ‘ஹெலிகொப்டர் பயணத்தை’ கடுமையாக நிராகரித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் பாகிஸ்தான் விஜயத்தின் போதும் அவர் ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கான தனது சமீபத்திய விஜயத்தின் போது, ஹெலிகாப்டர் பயணத்தை கடுமையாக மறுத்த ஈரான் ஜனாதிபதி, அஜர்பைஜானின் வடமேற்கு பிராந்தியத்தில் ஹெலிகாப்டர் பயணத்தின் போது விபத்துக்குள்ளானார்.

மோசமான வானிலை காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஈரானுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடைகளும் இந்த விபத்திற்கு காரணமாக இருக்கலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டுள்ளதால், ஈரானிய விமானங்கள் உதிரி பாகங்கள் அல்லது புதிய ஏர்ஃப்ரேம்களைப் பெற முடியாமல் உள்ளது.

இதனால் அங்குள்ள ஆகாய மார்க்க போக்குவரத்து சாதனங்கள் பாதுகாப்பற்றவையாக இருக்கலாம் என சர்வதேச பாதுகாப்பு ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஈரானின் ஜனாதிபதி மற்றும் வெளியுறவு அமைச்சர் பயணித்த பெல் 212 ஹெலிகாப்டர் ஞாயிற்றுக்கிழமை, கடும் மூடுபனியில் மலைகள் வழியாக பறந்து சென்றபோது விபத்துக்குள்ளானதாக ஈரான் அரசு ஊடகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீடித்த நல்லிணக்கமே ராணுவ வீரர்களுக்கு அளிக்கக் கூடிய உயர் கௌரவமாகும்

## ஆளுனர் நஸீர் அஹமட் தெரிவிப்பு!



குருநாகல் நகரில் அண்மையில் இடம்பெற்ற தேசிய ராணுவ வீரர்கள் நினைவு தின நிகழ்வில் வடமேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

நாட்டின் ஒருமைப்பாட்டையும், இறைமையையும் பாதுகாப்பதற்கும் அச்சமின்றி நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழும் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ராணுவ வீரர்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர், அங்கவீனமுற்றுள்ளனர் என்று ஆளுனர் நஸீர் அஹமட் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான ராணுவ வீரர்களின் உயிர்த்தியாகம் மற்றும் ஏனைய தியாகங்களுக்காக அவர்களை கௌரவிப்பதே நம்மால் செய்யக் கூடிய ஒரே ஒரு கை மாறாகும் என்று ஆளுனர் கூறினார்.

மேலும் அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள், உயிர்த்தியாகம் செய்த ராணுவ வீரர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக காணிகள் பகிர்ந்தளித்தல், வீட்டுத் திட்டங்களை நிர்மாணித்தல், படைவீரர்களின் பிள்ளைகளுக்கு கல்விக்கான உதவிகளை வழங்குதல் போன்ற விடயங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்ற போதிலும் அதே வழியை நானும் பின்பற்றி வடமேல் மாகாணத்தின் படைவீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் நலன் சார்ந்து செய்யக்கூடிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன் என்பதை நான் உறுதியளிக்கின்றேன் என்று ஆளுனர் நஸீர் அஹமட் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள், மாகாண சபை அதிகாரிகள், முப்படையினர் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள், உள்ளிட்ட மேலும் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# ஊடகவியலாளர் கவிஞர் இக்பால் அலி எழுதிய காலத்தின் கால்கள், குரங்குத் தம்பி ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா




அக்குறணை ஐடெக் கல்வி நிலையம், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் இணைந்து நடத்தும் இலக்கிய நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 23ம் திகதி காலை 9.30 அக்குறணை ஐடெக் கல்வி நிலைய மண்டபம் (தெலும்புகஹவத்த வீதி, பாலிகா பாடசாலைக்கு அருகில்) ஐடெக் கல்வி நிலையகத்தின் இயக்குனர் ஐ. ஐனுடீன் தலைமையில் இடம்பெறும் முதன்மை விருந்தினர்களாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினரும் கண்டி மாவட்ட அமைப்பாளருமான எம். எச். ஏ. ஹலீம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தி. செந்தில் வேலவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையின் ஆலோசனை சபை உறுப்பினர், பாக்கிஸ்தான் நாட்டின் வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார், ஜம்மிய்யதுல் அன்சாரிஸ் சுன்னத்துல் முஹம்மதிய்யா பொதுச் செயலாளர், ஏ. எல் கலிலுர்ரஹ்மான், அக்குறணை பிரதேச செயலாளர் ருவன்திகா குமாரி ஹென்நாயக ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# புதிய பதவியைப் பொறுப்பேற்றார் பைஸல் ஆப்தீன்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தில் 15 மாதங்களுக்கு மேல் சேவையாற்றிய முன்னாள் பணிப்பாளர் பைசல் ஆப்தீன் பதவி உயர் பெற்று கிழக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தில் கடந்த புதனன்று (15) கடமையைப் பொறுப்பேற்றார்.

# நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணங்கள் வழங்கி வைப்பு



(எம்.எம். ஜெஸ்மின், உமர் அறபாத்)

ஏறாவூர் நகர் மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பாடசாலைகள், வழிபாட்டுத்தளங்கள், சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் பொது நிறுவனங்கள் என்பவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணகள் கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன் (15) ஏறாவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதி தலைவருமான செய்யித் அலி ஸாஹிர் மௌலானா 2024 ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டில் 100 மில்லியன் ரூபா நிதி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ. சியானா, ஏறாவூர் நகரசபையின் செயலாளர் எம்.எச்.எம். ஹமீம், உதவிக்கல்வி பணிப்பாளர் உட்பட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முக்கியஸ்த்தர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# இலங்கையின் முதலாவது காலநிலை அமர்வு 2024 உடன் அமானா வங்கி கைகோர்ப்பு

SRI LANKA CLIMATE SUMMIT '24



காலநிலை மீட்சியுடனான பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வகையில், அறிமுக Code Red Sri Lanka Climate Summit 2024 நிகழ்வின் பிரதான அனுசரணையாளராக அமானா வங்கி கைகோர்த்திருந்தது. இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் முன்னெடுக்கப்பட்ட இந்த மாநாடு, சர்வதேச மற்றும் இலங்கை உள்ளம்சங்களின் அடிப்படையில், பிரதான பொருளாதாரத் துறைகளுக்கு ஏற்படக்கூடிய தடங்கல்கள் வெளிப்படுத்தி, காலநிலை மாற்ற நெருக்கடி தொடர்பான ஆழமான புரிதலை கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டிருந்தது. காலநிலை நெருக்கடி தொடர்பில் தீர்வு காண்பதற்கு புத்தாக்கமான தொழில்நுட்பங்கள் மற்றும் தீர்வுகள் தொடர்பில் கவனம் செலுத்தியதுடன், இலங்கையின் நிறுவனங்களுக்கு வியாபார வாய்ப்புகளுக்கான திறவுகோலையும் வெளிப்படுத்தியிருந்தது.

மூன்று நாள் மாநாடு, மே மாதம் 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை நடைபெற்றதுடன், 15 வெளிநாட்டு பிரதிநிதிகள் அடங்கலாக 50க்கும் அதிகமான பேச்சாளர்கள் அடங்கியிருந்தனர். காலநிலை மாற்றத்தை தவிர்க்கும் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல்கள், குறைந்த காபன் மற்றும் காலநிலை மீட்சி பொருளாதாரத்துக்கு அவசியமான கொள்கை மாற்றங்கள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டிருந்தன. வழமையான அமர்வுகளுக்கு மேலதிகமாக, பிரத்தியேகமான பிரதம நிறைவேற்று அதிகாரி அமர்வு முன்னெடுக்கப்பட்டதுடன், இதர நாடுகளின் முன்னணி பிரதம நிறைவேற்று அதிகாரிகளும், வியாபார உரிமையாளர்களும் கலந்து கொண்டு, வியாபார தீர்மானங்களில் காலநிலை மாற்றம் தொடர்பான தமது ஆழமான புரிதல்களை வெளிப்படுத்தியிருந்தனர்.




அருவிக்கரை



நாச்சியாதீவு பர்வீன்

# “மழையாகிறேன் வெயிலாகிறேன்”



– கெக்கிராவ சுலைஹா –

“மழையாகிறேன், வெயிலாகிறேன்“ முழுமதி எம்.முர்தளாவின் “மறுபேச்சு“ பதிப்பகத்தால் வெளியான 80 பக்கங்கள் கொண்ட கவிதை நூல்.என்னை வந்தடைந்து சுமார் ஓரிரு வாரங்களிருக்கும்.

வந்ததும் சற்று புரட்டிப் பார்த்துவிட்டு ஓய்ந்து

இப்போது மீண்டும் கையில் எடுக்கிறேன். மென்மையான முறையில் ரஸ்மி அஹமதின் அவர்களின் அட்டை ஓவியம். வெகு அழகு.. திரும்பி நின்று அது எதையோ பேசாமல் பேசுகிறது.

கவி முர்தளாவினது இயற்பெயர் பாறூக் முஹம்மது முர்தளா. கிழக்கிலங்கையின் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். கவிதை, சிறுகதை, நாடகம், கட்டுரை, மெல்லிசைப் பாடல்கள் என பன்முகத்தளத்தில் இயங்கி வருபவர்.“மழையாகிறேன் வெயிலாகிறேன்“ இவரது இரண்டாவது கவிதைத் தொகுதி.

மரணித்தும் தன் எழுத்தால் வாழும் கருங் கொடியூர் கவிராயர், கவிஞர் லாவன்னா லத்தீப், கவிஞர் ஏ. இக்பால், கவிஞர் சாலி இப்னு நபீஸா, கவிஞர் மஜீத் ஆகியோரின் நினைவுகளுக்கு நூல் சமர்ப்பணம் ஆக்கப் பட்டிருக்கிறது.

“மழையாகிறேன் வெயிலாகிறேன்“ நூலில் கிட்டத்தட்ட 79 கவிதைகள். கண்டங்கள் தாண்டிப் பயணிக்கும் ஒரு வலசைப் பறவை போல, சாத்தியமான மென் சிறகுகளைப் பெற்றுக்கொண்டு, ஒரு பறத்தல் நிகழ்கிறது.

நூலில் நிறைய அழகழகான கவிதைகள். அவை பேசுகின்றன. சிரிக்கின்றன. சிலபோது அழுகின்றன. கவிகின்றன.

பிரிவுத் துயரம் சொல்லும் “ஒரு நடு கல்லின் பயணம்“ கவிதையில் அவர் சொல்வார்,

”எனக்குத் தெரியாது அந்தக் கணம் வரை
உன்னை விட்டுப்
பிரிவேனென்று.
தெரிந்திருந்தால்
பூனை மயிரடர்ந்த
உன்
உதட்டோரம்
முத்தமிட்டி
ருப்பேன்.
ஒரு துளியும்
நம்பவில்லை
திடீர் திடீரென வரும்
மழைத்துளி போல பிரிவு
சொல்லிக் கொள்ளத் துணிவின்றி
அழுதோம்..”

”ஒரு பூ உதிர்வதைப் போல
ஒரு நட்சத்திரம் எரிவதைப் போல
ஓசைகளற்றது எமது அழுகை..
ஒரு காம்பின் வலியை நானுனக்குச்
சொல்லத் தேவையில்லை.”

வெகுவாக அழுகை வரும். திரும்பத் திரும்ப வாசிக்கும்தோறும் திரும்பத் திரும்ப அழுகை வரும் இதுபோல பல வரிகளுள்ளன நூலில்.

கவிஞனுக்கு ஒரு பள்ளி செல்லும் குமாரத்தி கண் சிமிட்டுகிறாள். “பருவ காலச் சீட்டு“ முடியுமட்டும் அலைச்சல் தான் இனி அவனுக்கு. படிப்பில் பெரிய படிப்பு அவள் கண்களில் படிப்பது. அவள் கண்களைப் படிப்பது. ஐயோ.. அவள் கருவிழிகள் உருளுகின்றன, எதுபோல..? போத்தலில் அடைக்கப்பட்ட, வெளியேற வழியற்ற ஒரு கரப்பான் பூச்சி போல... அழகு உவமை..

உம்மாவை,பெருநாளை, மலையை, மரத்தை, கொடியை, சிட்டுக்குருவியை, சினேகத்தை, குங்குமத்தை,கருங்குயிலை, ஆற்றை கடலை என்று இயற்கைமீதில் கோடி கோடி கண்கள் வைத்து முர்தளா பதிக்கிறார் கவனத்தை.

“பேரன்பின் உலகம்“ என்று தொடங்கும் கவிதை இது.

”என்ன செய்ய ஒரு கட்டத்திற்கு மேல்
இருவரும் பறப்பதை நிறுத்திவிட்டு
வானத்தை பிளந்துஆளுக்கொரு துண்டை
எடுத்துக் கொண்டோம்.

அன்றிலிருந்து உன்னிடம் ஒரு துண்டும்
என்னிடம் மறு துண்டுமென உதிர்ந்து
கிடக்கிறது வானத்தின் சிறகு.

என்னிடமிருக்கும் துண்டில்
நட்சத்திரங்களும் உன்னுடைய
துண்டில் நிலவுமென பிரகாசித்துக்
கொண்டிருக்கிறது
நம் பேரன்பின் உலகம்.
முழு வானமும் நம்
வசமிருக்க இருவரும்
பிணைந்திருப்பதே
ஆதியிலிருந்து வானத்தில்
கூடுகட்ட நினைத்து
நம் பின்னால் அலைந்து
கொண்டிருக்கும்
பறவைகளுக்கு நாம்
செய்யும் நன்றிக்கடன்”

பேரன்பின் பெரு உலகம் விலங்குகளுக்கும் பறவைகளுக்குமானது. மானுடர் நாம் கூறு போட்டு விட்டோம் அவற்றின் வானத்தை, வனத்தை. சேரன் அவர்கள் தன் அணிந்துரை குறிப்பில் சொல்வார்,

”என்னுடைய எண்ணத்தில் பேரன்பைத் தருவதும் பெறுவதும் மானுடத்துக்கும் மானுடர்களுக்கும் சாத்தியமில்லை. பேரன்பு என்றால் அது பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பேரறம். இயற்கையையும் பறவைகளையும் ஏனைய உயிரிகளையும் நேசித்து, ஓம்பி. அன்பு செய்து ஓங்கும் அறமும் காதலும் அது.”

என்று. கவிதைக்கு பணி செய்தல் போலவே, காடு கொண்டாடுவதும், காடு செய்வதுவும் பெரும் பணியே என்று சொல்லும் சேரன் அவர்கள் மேலும் சினந்து சொல்கிறார்,

”பேரன்பு என்ற அழகிய செறிவு மிக்கச் சொல்லை நம் காலத்தில் முகநூல் நண்பர்களும் கவிஞர்களும் ஏனையோரும் மிகையுறப் பயன்படுத்தி, அச்சொல்லின் ஈர்ப்பையும் ஆழத்தையும் கெடுத்து விட்டார்கள்.” என்று. உண்மை தான்.

“இரண்டு மழை“ அழகான கவிதை. காதலின் மழையையும், மழையோடு சேர்த்து கோர்க்கிறார் முழுமதி. நல்ல கூர் சிந்தனை.

”என்ன ஒன்று
நேரில் சந்தித்து
முத்தமிட்டுக் கொள்ளத் தான்
முடிவதில்லை.”

என்று தனது காதலியிடம், காதலனிடம் மானசீகமாக சொல்லிக் கொள்ளாத எவர் இருக்கிறார்? “உன்னை நினைத்தே..“அருமை.

பதுங்கிப் பதுங்கி விறாந்தையில் இரண்டு பூச்சிகள் பேசிக் கொள்வது கண்டு முழுமதி சொல்வார்,

”மனிதர்கள் தூங்கிய பிறகு தான் அவை வெளியில் வருகின்றனவோ? ”

மனுஷன் அழித்த, கொன்ற இயற்கையின் ஒரு நூற்றாண்டின் துயரத்தை உள்ளடங்கிய குரலோடு பேசுகிறார் அவர்.

எல்லாக் கவிதைகளுமே ஒரு மென்மைத் தன்மையோடு வாசகர் நம்மை அணுகி நிற்பதைக் காண்கின்றோம். ஆதலினால் உண்மையிலேயே இந்த எழுத்து உயிரனைய நம்முள் கலக்கிறது. மேலும் நம்மோடு நெஞ்சிலமர்ந்து ஆழப் பேசுகிறது.

தெளிவான சொற்களோடு எளிமையாய் விளங்கும் வண்ணம் நயமாக கவிதை செய்திருப்பது, அவர் பாணி எனப் புரிகிறேன். நேசிக்கிறேன் அந்த வகையை.

---

## “கரி”

மனிதா!
பசிக்கு
உன்னிடம்
உணவைத்தானே
கேட்டேன்!
பகரமாய்,
பட்டாசையல்லவா
புசிக்கத் தந்தாய்?

உன் மீது
நம்பிக்கைக் கொண்டுதானே
தும்பிக்கை நீட்டி
நீ தந்ததை உண்டேன்!
நம்பிக்கைக்குத்
துரோகமல்லவா
இழைத்துவிட்டாய்?

அன்னாசி என்றுதானே
ஆவலாய் அருகில் வந்தேன்!
என் ஆசைக் குட்டிக்கிங்கு
ஏன் செய்தாய் நீ தீங்கு?

கணபதி என்று
குட்டுப்போட்டுக்
கும்பிடுகிறாயே! - நீ
கடவுளையே
கொல்வது
தெய்வ குற்றமன்றோ ?

நான்,
இருந்தாலும் ஆயிரம் பொன்
இறந்தாலும் ஆயிரம்
பொன்னென்று
இறுமாப்புக் கொள்வாயே !
பிழைத்துப் போ - என்
குட்டியுடன் சேர்த்து
இரண்டாயிரம்
பொன்களைப்
பெற்றுக் கொள்!!

என்னைக் “கரி“
என்பாயே! - அதை
எடுத்து
உன் முகத்தில் அல்லவா
பூசிக் கொண்டாய் ?

பாவம்!
என் சிசுவுக்குத் தெரியாது
தன்னைக் கொன்றவன்
மனிதனென்று!
உன்னைப் பற்றிய
உயர்ந்த எண்ணத்திலேயே
அது இருந்துவிட்டுப்
போகட்டும்!!

மதம்
பிடித்திருப்பது
எனக்கா?
இல்லை
உனக்கா ?

–அப்துல் லத்தீப்–


A/L SCIENCE PROJECT - 2026
FOR ENGLISH & TAMIL MEDIUM STUDENTS

WHY CHOOSE AL MUHSIN SCIENCE COLLEGE ?
- FULL-TIME LEARNING AND TEACHING WITH ACCOMMODATION WITH SECURE ENVIRONMENT.
- COMPREHENSIVE LEARNING EXPERIENCE WITH DEDICATED TEACHERS.
- PERSONAL ATTENTION FROM HIGHLY EXPERIENCED TEACHERS
- GUIDANCE AND COACHING FROM SKILLED TUTORS AND UNIVERSITY STUDENTS.
- AL MUHSIN SCIENCE COLLEGE IS AT THE FOREFRONT OF EDUCATION, EQUIPPED WITH STATE-OF-THE-ART FACILITIES.
- BEYOND ACADEMICS, WE FOCUS ON YOUR OVERALL GROWTH, FOSTERING SKILLS FOR A DYNAMIC FUTURE.
- JOIN A PRESTIGIOUS INSTITUTION WITH A HISTORY OF PRODUCING SUCCESSFUL AND ACCOMPLISHED STUDENTS.

அல் முஹ்ஸின் விஞ்ஞானக் கல்லூரி
மல்வானை
புது மாணவர் அனுமதி - 2026
- மொழி மூலம் :- ஆங்கிலம், தமிழ்
- புது மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- பதிவுகளுக்கு:- Whats app:- 076 450 5951
- மேலதிக தகவல்களுக்கு :- 075 800 8159 / 071 648 2181

(மாணவிகளுக்கு மாத்திரம்)



OUR TEACHERS PANNAL

BIOLOGY

M.G.M.M. ASLAM (B Sc, PGDE, SLTS)

CHEMISTRY

M.L.M. MUKARRAM (M Sc, PGDE, SLTS)

K.NUSATHIR (B.Sc)

PHYSICS

M.R.M. RUMAIS (B Sc)

N. NILOAFER (B Sc)

COMBINED MATHS

M.I. ZAINUR RIFANNCIT (Mech.Eng.)

SUPPORTING STAFF

M.N.F NASHRIN B.Sc (Biology)

M.N.F.Rimsha B.Sc (Chemistry)

M.A.F. ASHFA B.Sc (Physics)

NEW BATCH 2026 INTAKE ON 23rd JUNE 2024

AL MUHSIN SCIENCE COLLEGE



# மனிதனின் செயற்பாடுகளை இலகுபடுத்தும் தொழிநுட்பங்கள் அல்லாஹ்வின் அருள்

## அந்த அருள்களை புறக்கணிக்காதிருப்போம்

ஹரீஸ் ஸாலிஹ்

மனிதனின் செயற்பாடுகளை இலகு படுத்தும் தொழிநுட்பங்கள் அல்லாஹ்வின் அருள். அந்த அருள்களை புறக்கணிக்காதிருப்போம். ஸ்மார்ட் ஸ்கூல், ஸ்மார்ட் மஸ்ஜித், ஸ்மார்ட் மத்ரஸாவின் தேவை.

Smart phone, Smart Watch, Smart TV, Smart Car, Smart Security Camera, Smart Banking, Smart Farming, Smart Business, Smart Education, Smart Kitchen, Smart Toilet, Smart Home என்று எம்மைச் சுற்றியுள்ள அனைத்துமே ளுஅயசவ ஆக மாறிக்கொண்டே இருக்கும் போது நமது பள்ளிவாயில்களும், மத்ரஸ ாக்களும் ளுஅயசவ ஆக வேண்டியது காலத்தின் கட்டாயத் தேவையாக இருந்து கொண்டிருக்கிறது.

மஸ்ஜித்களுக்கும், மத்ரஸாக்களுக்கும் வெளியே அனைத்தும் Smart ஆகி விட்டன. மத்ரஸாவிலிருந்து வெளியான பின் ஒரு குடும்பஸ்தர் தனதும், தனது பிள்ளைகளினதும், தனது குடும்பத்தினதும் தொழில் சார், கல்வி சார் மற்றும் சமூகம் சார்ந்த ஒட்டு மொத்த தினசரி பணிகளையும் புரிவதற்கு மேற்கூறியதை விடவும் இன்னும் பல ளுஅயசவ உபகரணங்களை பயன்படுத்த கற்றுக்கொள்ள வேண்டிய தேவை இருக்கும் போது மத்ரஸா மாணவர்களுக்கு சிறு வயது முதல் இவற்றை முறையாக கற்றுக் கொடுக்க மறுக்கிறோம்.

சாதாரண ஒரு மனிதன் தினமும் ஒவ்வொரு தேவைக்குமுரிய App fis Download செய்வது, Documents களை Upload செய்வது, Edit, Convert, Translate, டீயமெ வுசயளெகநச, குநநளீயலஅநவெ, டீடைட Payment, Email, Print போன்ற விடயங்களை செய்வது வாழ்க்கையின் ஒரு அம்சமாக மாறி விட்டது. இன்று கதீப்மார்கள் ளுஅயசவீழநெ, ஆீயன, வுயடிடநவ களிலேயே தமது குத்பா குறிப்புக்களை வைத்திருக்கிறார்கள். குத்பா பிரசங்கங்கள் ளுஅயசவீழநெ களூடாக உடனுக்குடன் Internet மூலம் Social Media க்களில் LIVE Stream பகிரப்படுகின்றன. அதே சமயம் அவை ஊடழரன னுசளைந க்கு ரூடழயன செய்யப்பட்டு ளுயளநஃ டீயஉமரி பண்ணப்படுகின்றன.

இன்று வெளி நாடுகளில் சாதாரண ஒரு காரியாலய உத்தியோகம் (Data Entry) செய்வதற்கு ஆகக் குறைந்தது Computer, Laptop, Tablet, Windows, MS Office, WhatsApp, Twitter, Instagram, email, Printing ஆகியவற்றை உபயோகிக்கும் அறிவு தேவை. ஒரு வீட்டுச் சாரதியாக வேலை செய்யக்கூட Smart Phone, Whatsapp, GPS ஆகியவற்றை உபயோகிக்கும் அறிவு தேவை.

ஒரு மாணவனுக்கு சுமார் 17-18 வருடங்கள் வரை இவற்றைப் பற்றிய எந்த அறிவும் கொடுக்கப்படாமல் தூ ரமாக்கி வைக்கப்பட்டுவிட்டு பிறகு தொழில் தேடும் போது இவற்றை வலுக்கட்டாயமாக புகட்ட வேண்டிய நிலை ஒன்று இன்று காணப்படுகிறது. எமது இந்த காலவதியான போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சிறந்த தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வது சுலபம் இல்லை. தொழிநுட்பங்களைப் பற்றிய எதிர்ப்பு நிலை (Technophobia) மாறி தொழிநுட்பங்களை எமக்கு சாதகமானதாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

## வலம்புரி கவிதா வட்டத்தின் கவியரங்க விழாவும், "வகவக் கவிதைகள்" நூல் வெளியீடும்

வலம்புரி கவிதா வட்டம்

(ஐ. ஏ. காதிர் கான்)

"வகவம்" எனும் "வலம்புரி கவிதா வட்டத்"தின் 100 ஆவது கவியரங்க விழாவும் "வகவக் கவிதைகள்" நூல் வெளியீடும், எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு, கொழும்பு - 07, ஜே.ஆர். ஜயவர்தன நிலையத்தில் நடைபெறும்.

"வலம்புரி கவிதா வட்டத்" தலைவர் என். நஜ்முல் ஹுஸைன் தலைமையில் நடைபெறும் இச்சிறப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக, ஈஸ்வரன் பிரதர்ஸ் அதிபர் கணேஷ் ஈஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

"வகவ" சிரேஷ்ட ஸ்தாபகர், சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி முன்னிலை வகிக்கிறார். சிறப்பு அதிதிகளாக தினகரன்ஃதினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், வீரகேசரிஃவீரகேசரி வார வெளியீடு பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன், தமிழன்/தமிழன் ஞாயிறு வெளியீடு பிரதம ஆசிரியர் சிவா ராமசாமி, "ஞானம்" ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்.ஜே. பாத்திமா ரினூஷியா, கெப்பிட்டல் டிவி/கெப்பிட்டல் எகப்.எம். பிரதானி ஷியாஉல் ஹசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா விசேட பேச்சாளராக பங்கேற்கிறார். "கலாபூஷணம்", "தமிழ்த்தென்றல்" அலி அக்பர் தலைமையில் 100 ஆவது கவியரங்கம் இடம்பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஈரான் ஜனாதிபதிக்காக இலங்கை முஸ்லிங்கள் துஆ பிரார்த்தனை செய்ய வேண்டும்

## கலிலூர் ரஹ்மான் உலமா சபையிடம் வேண்டுகோள்

திடீர் ஹெலிகாப்டர் விபத்தில் ஈரான் அதிபர் ரைசி உட்பட 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தது குறித்து ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சி சார்பில், அவர்களது குடும்பத்தினருக்கும், ஈரான் நாட்டு மக்களுக்கும் இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம் என ஐக்கிய சமதான கூட்டமைப்பின் பொருளாளரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ. ஏ. கலீலுர் ரஹ்மான் வெளியிட்டுள்ள அனுதாப செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும், ஈரானிய ஜனாதிபதி ரைசி மற்றும் வெளியுறவு அமைச்சர் அமீர் அப்துல்லாஹி, கிழக்கு அஜர்பைஜான் ஆளுநர் மாலிக் ரஹ்மதி மற்றும் தப்ரிச் நகர மதத்தலைவர் இமாம் அலி அஸ் ஹாஷிம், தளபதி மஹ்தி மூஸவி ஆகியோருடன் இணைந்து உயிரிழந்த நான்கு பேருக்கு இலங்கை சமூகம் இரங்கல் தெரிவிக்கிறது. அவர்களுக்கு, இஸ்லாத்தின் உன்னதமான ஜன்னதுல் பிர்தௌஸ் கிடைக்க பிரார்திக்கிறோம்.

இலங்கை முஸ்லிம் சமூகம் அவர்களுக்காக கைப் ஜனாஸா தொழுது பிரார்த்தனை செய்வதற்கும் அவர்களுக்காக பிரார்த்தனை செய்ய அகில இலங்கை உலமா சபை ஆன்மீக வழிகாட்டலை வழங்க வேண்டும், குறிப்பாக எதிர்வரும் (24) வெள்ளிக்கிழமை, அரசியல் மற்றும் சிவில் தலைவர்கள் முஸ்லிம் சமூகத்தை வெள்ளைக் கொடி ஏந்தியபடி இரங்கல் தெரிவிக்க வலியுறுத்த கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப் போனால் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் உலக முஸ்லிம் தலைவர்களின் மரணத்தை இந்நாட்டு முஸ்லிம் தலைவர்கள் கையாண்டார்கள். இஸ்லாமியப் புரட்சிக்குப்




பிறகு, ஈரான் அதன் நிறுவனர், உச்ச ஆன்மீகத் தலைவரான கொமெய்னியால் ஆளப்படுகிறது, அவரது மரணத்திற்குப் பிறகு, அலி கமேனி தற்போதைய உச்ச ஆன்மீகத் தலைவராக இருக்கிறார்.

எனவே, உச்ச ஆன்மீகத் தலைவர் அலி கமேனியின் பரிந்துரையின் பேரில், ஈரானிய அரசியலமைப்பின்படி, துணை ஜனாதிபதி மொக்பர் எதிர்காலத்தில் ஈரானின் தற்காலிக அதிபராக செயல்பட உள்ளார், மேலும் ஈரான் மக்கள் 50 நாட்களுக்குள் புதிய அதிபரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி உட்பட ஈரானிய அரசாங்கம் அதன் உயர்ந்த ஆன்மீகத் தலைமையின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதால், இஸ்லாமிய உலகில் ஒரு சக்திவாய்ந்த நாடாக ஈரானின் துணிச்சலுக்கு யாராலும் சவால் விட முடியாது என்பதை நான் இங்கு கூறுகிறேன் என்று கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ.கலிலூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

www.uthayam.lk
உதயம்

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) வலம்வருகின்ற **"உதயம்"** பத்திரிகைக்கு வாசகர்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடுங்கள்...

# தர்காநகர் விஞ்ஞான செயற்றிட்டத்தில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் விஷேட கூட்டம்










(பீ.எம்.முக்தார்)

இந்த மேலதிக வகுப்புகளுக்கான புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளவது தொடர்பான பெற்றோர் மாணவர்களுக்கான விஷேட கூட்டம் நேற்று தர்காநகர் இஷாஅத்துல் இஸ்லாம் சிறுவர் அபிவிருத்தி மன்றத்தில் நடைபெற்றது.

ரூமி ஹாசீம் பௌண்டேசன் ஸ்தாபகரும் இலங்கை மருந்தாக்க கூட்டுத்தாபன முன்னாள் தலைவருமான டொக்டர் ரூமி ஹாசீம் செயலாளர் ஜெஸூக் அஹமத் , முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம் எஸ்.எம்.அஸ்லம் ,அல் ஹம்ரா அதிபர் பஸ்லியா, முன்னாள் அதிபர் எம் இஸட்.எம் நயீம், தர்காநகர் இஸ்லாமிய நலன்புரி சங்க தலைவர் ஏ பீ எம.ஸூஹைர் உட்பட விரிவுரையாளர்கள், அரசியல்வாதிகள், பெற்றோர்கள், மாணவர்கள் என பெருந்திரளானோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ரூமி ஹாசிம் பவுண்டேசன் ஏற்பாட்டில் தர்கா நகர் விஞ்ஞான செயற் திட்டம் (னுாயசபய வுழறெ ளுஉைநெஉந ீசழதநஉவ) 2026 ஆம் ஆண்டில் கல்விபீ பொதுத் தராதர உயர் வகுப்பு,விஞ்ஞான பிரிவில் தமிழ்,ஆங்கில மொழிகள் மூலம் பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இந்த மேலதிக வகுப்புகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான பெற்றோர்,மாணவர்களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் 19 திகதி (19-5-2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தர்கா நகர் இஷாஅத்துல் இஸ்லாம் சிறுவர் அபிவிருத்தி நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

ரூமி ஹாஷிம் பவுண்டேஷன் ஸ்தாபகரும் இலங்கை மருந்தாக்கக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவருமான டொக்டர் ரூமி ஹாஷிம்,செயலாளர் அல்-ஹாஜ் ஜெஸ/க் அஹமட் ஆகியோர் உட்பட பல முக்கிய பிரமுகர் கலந்து கொள்வர்.

பௌதீகவியல்,இரசாயனவியல்,உயிரியல் இணைந்த கணிதம் ஆகிய பாடங்களுக்கென புதிய மாணவர்கள் தொடர்ந்து பத்தாவது வருடமாகவும் இவ் மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்படவிருக்கின்றன.இந்த வகுப்புக்களிலும் நாட்டின் முன்னணி ஆகியோர்கள் விரிவுரையாளர்களாக கடமையாற்றுகின்றனர்.

இந்த மேலதிக வகுப்புகளில் இணைந்து விஞ்ஞான பிரிவில் கல்வி பெற விரும்பும் வெளியிடங்களைச் சேர்ந்த மாணவ,மாணவியருக்கு மிகவும் பாதுகாப்பான சூழலில் தனித்தனியான தங்குமிட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு தர்கா நகரில் உள்ள பாடசாலைகளில் இணைந்து கல்வியை தொடரவும் வாய்ப்புகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக செயலாளர் அல்-ஹாஜ் எம்.ஜெஸ/க் அஹமட் தெரிவித்தார்.

தர்கா நகர் விஞ்ஞான செயல்திட்டத்தின் மேலதிக வகுப்புகளில் கல்வியைப் பெற்ற பல மாணவர்கள் கடந்த பத்து வருட காலப்பகுதியில் மருத்துவம்,பொறியியல் உட்பட விஞ்ஞான பிரிவிலுள்ள துறைகளில் உயர் கல்வியை பெற பல்கலைக்கழக பீடங்களுக்கு தெரிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



# பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் நடத்தும் கொடூர செயலில் அமெரிக்காவின் பங்கு என்ன?




எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

பல ஆண்டுகளாக அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக இஸ்ரேல் இருப்பது சர்வதேச நாடுகள் அனைத்தும் அறிந்து உண்மை என்பதில் எந்த.

அதிலும் காஸா மீது இஸ்ரேல் அரசு இனப்படுகொலையை நிகழ்த்தும்போது அமெரிக்கா அதற்கு பக்கபலமாக நின்று எந்த அளவுக்கு ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்கிறது என்பதை நாம் பார்த்து வருகிறோம். 1948ல் இஸ்ரேல் எனும் நாடு உருவான சமயம் முதலாக இரண்டு நாடுகளுக்கும் மத்தியில் மிக பலமான உறவு இருந்துவருகிறது. இந்த உறவு வலுவாக இருப்பதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன.

பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பில் இருந்த பாலஸ்தீனில் 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. அப்போது 7 லட்சத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் தம் வாழ்விடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள். முதல் நாடாக இஸ்ரேலை அங்கீகரித்த நாடு அமெரிக்கா. அப்போது அதிபராக ட்ரூமன் இஸ்ரேல் உருவான 11 நிமிடங்களில் அதை அங்கீகரித்தார்.

1800களில் யூதர்களுக்கென்று ஒரு தேசத்தை உருவாக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு ஸியோனிச இயக்கம் உருவாக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளாக அடக்குமுறைக்கு உள்ளாகிவரும் யூதர்களுக்கான தீர்வு தனி நாடு அமைப்பதுதான் என்று அவர்கள் முழங்கினார்கள். யூத இனப்படுகொலை ஐரோப்பாவில் நடந்திருந்த பின்னணியில், ஸியோனிஸ்டுகளின் தேச உருவாக்கத் திட்டத்துக்கு 1930, 1940களில் பெரும் அனுதாபம் இருந்தது. அமெரிக்கா இஸ்ரேலை ஆதரிக்க இதுவொரு காரணம் இந்த நிலையில் அமெரிக்கா அதிபர் ஹாரி ட்ரூமன் இஸ்ரேல் உருவாக அமெரிக்கா ஆதரவு வழங்கும் என்று வாக்குறுதி கொடுத்தார். அன்றிலிருந்து இன்றுவரை அமெரிக்க-இஸ்ரேல் நட்பு தொடர்கிறது.

அதே சமயம் அமெரிக்காவும் இஸ்ரேலும் ஜனநாயகம், மதச்சார்பின்மை மாதிரியான மதிப்பீடுகளை, விழுமியங்களைக் கடைப்பிடிப்பதில் பரஸ்பரம் ஒத்துப்போவதாக அமெரிக்க அரசியல்வாதிகள் தொடங்கி அதிபர்கள்வரை சொல்லி வருகிறார்கள். மத்தியக் கிழக்கிலுள்ள ஒரு ஜனநாயக நாடு இஸ்ரேல் என்று அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ட்ரம்ப் போன்ற பலர் சொல்லியிருக்கிறார்கள். அதேசமயம், இஸ்ரேல் இன வேற்றுமை அரசாக (யியசவாநனை எவயவந) இருப்பதைப் பற்றியெல்லாம் அமெரிக்கா வாய்திறக்காது என்பதை நமக்கு சொல்லித் தெரிய வேண்டியதில்ல

அமெரிக்காவும் இஸ்ரேலும் தங்களின் நலன்களுக்குப் பரஸ்பரம் உதவிக்கொள்வதன் மூலமே அவர்களுக்கு மத்தியிலான உறவும் பந்தமும் பலமாக உள்ளது. குறிப்பாக அரபுகள் மத்தியில் தமக்கு ஒரு நம்பகமான கூட்டாளி தேவை என்பதை அமெரிக்கா நன்கு உணர்ந்து உள்ளதே இந்த உறவின் அடிப்படையிலான காரணமாக அமைந்து உள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மிகப்பெரும் தொகையை இஸ்ரேலுக்கு அமெரிக்கா வழங்கியிருக்கிறது. இந்த அளவுக்கு வேறு யாருக்கும் அந்த நாடு நிதி வழங்குவதில்லை. 1946ல் இருந்து 2023 வரை 260 பில்லியன் டாலர்களை வழங்கியிருக்கிறது (ளுழரசஉந: ஊழபெசநளளழையெட சுநளநயசஉா ளுநசஎனைஉந). 2008 வரை பொருளாதார உதவியும், ராணுவ உதவியும் வழங்கி வந்த அமெரிக்கா இப்போது ராணுவ உதவி மட்டும் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஆண்டுக்கு 3.8 பில்லியன் டாலர்களை இஸ்ரேல் அமெரிக்காவிடமிருந்து பெறுகிறது. வேறு வார்த்தையில் சொல்வதானால் அமெரிக்க குடிமக்களின் வரிப் பணத்தில் இஸ்ரேல் ராஜ வாழ்க்கை வாழ்கிறது. ராணுவ பலத்தையும் பன்மடங்கு பெருக்கியிருக்கிறது. இந்த அடிப்படையில் தான் இஸ்ரேலிய அரசு போர் விமானங்கள் முதல் வான் பாதுகாப்பு சாதனமான ஐசழெ னுழஅந னநகநஉந ஸலளவநஅ வரை அமெரிக்கா வழங்கியதுதான். அமெரிக்கா வழங்கும் நிதியைக் கொண்டு அமெரிக்க ஆயுத நிறுவனங்களிடமிருந்து இஸ்ரேல் இவற்றைப் பெற்றுக்கொள்கிறது. ஆயுதத் தளவாடங்ககளைப் பிரயோகிப்பது தொடர்பாக எந்த நிபந்தனையையும் இஸ்ரேலுக்கு அமெரிக்கா விதிக்கவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

கடந்த வாரம் வெளியான பைடனின் தொலைக்காட்சி நேர்காணலுக்கு முன்னதாக, இஸ்ரேலுக்கு செல்ல வேண்டிய ஒரு ஆயுதக் கப்பலை நிறுத்தி வைத்தது அமெரிக்கா. அதில் இஸ்ரேலுக்கு அனுப்ப வேண்டிய 2,000-பவுண்டு மற்றும் 500-பவுண்டு வெடிகுண்டுகள் இருந்தன. அதிக சக்திவாய்ந்த ஆயுதங்களை மக்கள் நெருக்கமாக வாழும் நகர அமைப்புகளின் மீது பயன்படுத்தும்போது, காஸாவின் பிற பகுதிகளில் ஏற்பட்டது போல மோசமான விளைவுகளை அது ஏற்படுத்தும் .2,000 பவுண்ட் குண்டுகள் இஸ்ரேலின் ஆயுதக் களஞ்சியத்தில் உள்ள மிகவும் அழிவுகரமான ஆயுதங்களில் ஒன்றாகும். ஹமாஸை ஒழிக்க இத்தகைய ஆயுதங்கள் அவசியம் என்று இஸ்ரேலிய இராணுவம் வாதிடுகிறது.கடந்த வெள்ளியன்று அமெரிக்க வெளியுறவுத்துறை, இந்த ஆண்டின் தொடக்கத்தில் பைடனால் உத்தரவிடப்பட்ட ஒரு அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையில், காஸா போரின் போது சில சந்தர்ப்பங்களில் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறி அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களை இஸ்ரேல் பயன்படுத்தியிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதே நேரம் 'முழுமையான தகவல்கள்' இல்லை என்றும் அந்த அறிக்கை கூறியது, எனவே அமெரிக்கா இஸ்ரேலுக்கான இராணுவ உதவியைத் தொடரலாம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது . அதனால் இஸ்ரேல் எப்படி வேண்டுமானால் அவற்றைப் பயன்படுத்தலாம், அநியாயமும் அட்டூழியமும் புரியலாம் என்ற நிலை இருக்கிறது.

அமெரிக்காவில் இஸ்ரேலுக்கு ஆதரவான பொதுக் கருத்து நிலவுகிறது. காஸா மீதான போர் தொடங்கிய பிறகு அதில் ஒரு குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டு வருவது உண்மை. சிக்கல் என்னவென்றால், அமெரிக்காவின் சுமார் 25 சதவீத நுஎயபெநடஉையட கிறிஸ்தவர்கள் இஸ்ரேல் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தம்மை கிறிஸ்தவ ஸியோனிஸ்டுகளாக அடையாளப்படுத்திக்கொள்கிறார்கள். அதாவது இயேசு ராஜா ஒரு யூதர் என்று கண் மூடித்தனமான குருட்டு நம்பிக்கையில் தான் அவர்கள் யூத ஆதரவு நிலையில் தொடர்வதை காண கூடியதாக உள்ளது. கிறித்தவ சமய கோட்பாடுகளின் அடிப்படையில் தங்களின் நிலைப்பாடுகளை பைபிளைக் கொண்டு அவர்கள் நியாயப்படுத்துகிறார்கள். கடவுள் யூதர்களுக்கு அந்த நிலத்தை வாக்களித்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

இதுபோக, யுஜீயுஊ இஸ்ரேலின் லாபி குழுக்கள் அமெரிக்காவில் மிக வலுவாக இருக்கிறார்கள். அவர்கள் அமெரிக்க அரசியல் மிகுந்த செல்வாக்கைக் கொண்டிருக்கிறார்கள். தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களுக்கு பெரிய அளவில் நிதியுதவி தரும் அமைப்பாக யுஜீயுஊ இருக்கிறது. இஸ்ரேல் விஷயத்தில் அந்த வேட்பாளர் என்ன நிலைப்பாட்டில் இருக்கிறார் என்பதைப் பொருத்தே அது நிதி வழங்குகிறது. யுஜீயுஊ மாதிரியே பல குழுக்கள் இஸ்ரேலுக்கு ஆதரவான கொள்கை உருவாக்கத்துக்காக அமெரிக்காவில் செயல்படுகின்றன.

இப்படியான விஷயங்கள்தாம் அமெரிக்க இஸ்ரேல் உறவை பலமாக்கியிருக்கின்றன. வரலாற்று ரீதியான தொடர்வு, ஒரே மதிப்பீடுகளைக் கொண்டிருப்பதாகக் கருதுவது, ராஜாங்க நலன், மதம், அரசியல் ஆதரவு ஆகியன இவ்விரு நாடுகளையும் பிணைத்திருக்கிறது.

இந்தப் பின்னணியில்தான் இன்றைக்கு பாலஸ்தீனில் கொத்துக்கொத்தாக மக்களைக் கொன்று குவித்தாலும் அமெரிக்கா இஸ்ரேலை விட்டுக் கொடுப்பதில்லை. இஸ்ரேல் எவ்வளவு கொடூரத்தை இழைத்தாலும் அமெரிக்காவின் துணை கொண்டு அதிலிருந்து தப்பிவிடலாம் என்ற மிதப்பில் இஸ்ரேல் இருக்கிறது. அதனால்தான் ஐநா சபையையோ சர்வதேச சட்டங்களையோ அது கொஞ்சமும் பொருட்படுத்துவதில்லை.

உண்மையில், அமெரிக்க அதிபராக ஆசைப்படும் யாராக இருந்தாலும், இஸ்ரேலை ஆதரித்தால் மட்டும்தான் அது சாத்தியம். அவ்வளவு ஏன், நாடாளுமன்ற உறுப்பினராகக்கூட இஸ்ரேல் ஆதரவு அவசியம். அந்த அளவுக்கு அமெரிக்காவில் வலுப்பெற்று நிற்கிறது யூதர்களின் ஆதிக்கம்.தனிப்பட்ட உதவி தொடங்கி, அமெரிக்காவில் ஆதிக்கம் செலுத்தும் பெரும் நிறுவனங்கள் உட்பட பல யூத அமைப்புகளும், இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு தருவதை நிலைநிறுத்தி வருகிறது.

இஸ்ரேல் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பது குறித்து நாம் அனைவரும் சுய-நீதிகளைப் பெறுவதற்கு முன்னர், மொசூல் மற்றும் ரக்காவில் அமெரிக்கா ஏராளமான அப்பாவி மக்களைக் கொன்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது" 2016 மற்றும் 2017 இல் ஈராக் நகரங்கள் மீதான அமெரிக்கத் தாக்குதல் காரணமாக பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிரிழப்புகளுக்கு இட்டுச் சென்ற கண்மூடித்தனமான குண்டுவீச்சுகள் இழிபுகழ் பெற்றவையாகும்.

அதன் பின்னர், இரண்டாம் உலகப் போரின் போது பசிபிக் பகுதியில் அமெரிக்கப் போரில் ஹிரோஷிமா மற்றும் நாகசாகிக்கி மேலாக, 69 ஜப்பானிய நகரங்களை நாசம் செய்த கருப்பு வரலாறு யாராலும் மறக்க முடியாத ஒன்றாகும். இதன் மூலம் பாரிய அளவிலான மக்களை, அதே நேரத்தில் அரசாங்கத்துடன் எந்த தொடர்பும் இல்லாத அப்பாவி மக்களை, ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை படுகொலை செய்த அமெரிக்கா ராணுவம் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

"போர் ஒரு பயங்கரமான விடயமாக இருக்கிறது. ஆனால் அதற்கு அர்த்தம் இருக்கப் போகிறது என்றால், அதற்கு ஏதேனும் அறநெறி உணர்வு இருக்கப் போகிறது என்றால், அங்கே ஒரு அரசியல் நோக்கம் இருக்க வேண்டும், அது குறைந்த செலவில் விரைவாக அடையப்பட வேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாகும்.

இந்த கட்டத்தில், "சமாதான செயற்பாட்டாளர்கள் உண்மையில் போருக்கான ஆதரவு செயற்பாட்டாளர்களாக இருக்கிறார்கள், நாங்கள் சமாதான செயற்பாட்டாளர்களாக இருக்கிறோம். எனவே நீங்கள் போரை விரும்பவில்லை என்றால், நீங்கள் வலுவாக இருப்பது நல்லது. உங்கள் எதிரியை நீங்கள் பயமுறுத்த வேண்டும்" . இது தான் அமெரிக்கா வெளிவிவகார துறை சார்ந்த சித்தாந்தம் சார்ந்த தத்துவம் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பே இல்லை

அமெரிக்காவில் இருக்கும் யூத கழகங்களில் வற்புறுத்தல் மற்றும் ஆதிக்கம் ஆகியவற்றின் காரணமாக, இஸ்ரேலை கண்மூடித்தனமாக ஆதரிக்கிறது அமெரிக்கா. இதனால், மத்திய கிழக்கில் இஸ்ரேலின் கையும் ஓங்கி நிற்கிறது. இஸ்ரேல், அமெரிக்காவின் 51வது மாநிலம் என்றும் சிலர் கேலியாக குறிப்பிடுவதுண்டு. அந்த அளவுக்கு இஸ்ரேல் – அமெரிக்கா இடையான உறவு பலமானதாக இருந்து வருகிறது. மத்தியக்கிழக்கில் தனக்கொரு நேச நாடு, ஆதிக்க சக்தி வேண்டும் என்று அமெரிக்கா முடிவெடுத்ததும், அமெரிக்காவின் அரசியலில் யூதர்களின் ஆதிக்கமும் இருநாடுகளின் உறவில் பிரச்னை இல்லாமல் நீடிக்க வைக்கின்றன. இந்த சமரச உறவால், இஸ்ரேலை அமெரிக்கா தட்டிக்கேட்க முடியாமல் இருந்து வருகிறது. கொஞ்சம் கூட இரக்கம் இல்லாமல் நடந்து கொள்ளும் இந்த தேசங்கள் பயங்கரவாதம், ஜனநாயகம் மற்றும் மனித நேயம் சார்ந்த செயல்முறைகள் குறித்து பேச முற்படுவது ஒட்டு மொத்த மனித உரிமைகள் மற்றும் மனித இன மாண்புகளை கொச்சைப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

ஹிட்லர் 1937 இல் ஜேர்மனியின் தலைமைத் தளபதிகளிடம் கூறிய ஒரு இழிவு சார்ந்த அறிக்கைக்கு மற்றொரு நிகழ்வாக உள்ளது, "ஜேர்மனிக்கான கேள்வி என்னவென்றால், மிகக் குறைந்த செலவில் சாத்தியமான மிகப்பெரும் வெற்றியை எங்கே அடைய முடியும் என்பதாகும்."

"ஹிட்லர் யூதர்களை 'காசநோய் பாக்டீரியாவுடன்' ஒப்பிட்டார்" .ஹிட்லரின் யூத-விரோத வாய்வீச்சின் ஒரு பொழிப்புரையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. " ஜான் கெல்லியிடம் கூறியதாக கூறப்படுகிறது.

ஹிட்லரின் கீழான ஜேர்மன் இராணுவம் அது போர் சட்டத்தை முற்றிலுமாக கைவிட்டு, பத்து மில்லியன் கணக்கான மக்களை அப்பாவி யூத மக்கள் மற்றும் சிறைபிடிக்கப்பட்ட சிப்பாய்கள் உட்பட சட்டவிரோதமாகக் கொன்றது. இந்த நிலையில் தான் உலகில் எல்லா சமூக மக்களால் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வெறுப்பு சக்தியாக அடையாளம் காணப்பட்ட யூதர்களை அரவணைத்து இடம் தந்த அரபு மக்களை இன்று கிறித்தவம் மற்றும் யூத இனத்தின் தேசங்கள் படுகொலை செய்து வருகின்றனர். பெரும்பாலான கிறித்தவ சமயத்தைப் பின்பற்றுகின்ற தேவாலயங்களில் கூட யூதர்களின் வெற்றிக்கு பிரார்த்தனை புரிவதை நாம் காண கூடியதாக இருக்கிறது.

ஒரு அநீதிக்கு மற்றொரு அநீதியான செயல்கள் எந்த வடிவத்திலும் சமமான செயலாக இருக்க வாய்ப்பே இல்லை. ஆனால் மத்திய தரைக்கடல் பகுதியில் தங்கள் எல்லை மற்றும் அதிகார வளையத்தை விரிவாக்கம் செய்யும் நோக்கில் தான் இவர்களின் இந்த கொடூரமான செயல்பாடுகள் தொடருகிறது. இது வரைக்கும் 35,000 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் ஊனமுற்ற நிலையில் வாழ்ந்து வருகின்ற சூழ்நிலையில் நிச்சயமாக இவர்களுக்கான நிறந்தர தீர்வு ஒன்றே இறுதி வெற்றியாக அமையும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

காலம் எல்லாவற்றையும் நிச்சயமாக நிர்ணயம் செய்தே தீரும். அது எத்தனை காலம் என்பதே இது வரை நம் யாரும் அறிந்து கொள்ள இயலாத சூழலில் இது போன்ற கொடூரமான இனவாத தாக்குதல்கள் தொடருகிறது என்பதே உண்மையாகும்....!

# பாலஸ்தீனத்தை இல்லாதொழிக்கும் இஸ்ரேலின் வெறியாட்டம் வெற்றியளிக்காது; இறுதி வெற்றி ஜனநாயகத்துக்கே!

## - மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் சபையில் தெரிவிப்பு -



உள்நாட்டு கடல் வளங்களையே இந்திய மீனவர்களிடமிருந்து பாதுகாக்க முடியாத இலங்கை கடற்படையினரை, மத்திய கடல் பிரதேசத்தை பாதுகாக்கும் பணிக்காக அனுப்பியிருப்பதன் பின்னணி என்ன? என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் (14) இடம்பெற்ற பாலஸ்தீனின் தற்போதைய நிலை குறித்த விவாதத்தில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"இந்திய மீனவர்களின் ஊடுருவல்களால் நம் நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுகிறது. இதைக்கூட கட்டுப்படுத்த அரசாங்கத்துக்கு திராணியில்லை. இந்தக் கடற்படையா மத்திய கிழக்கு கடற்பகுதியின் கப்பற்போக்குவரத்தை பாதுகாக்கப்போகிறது? எனவே, அரசாங்கம் பாலஸ்தீன் விவகாரத்தில் இரட்டைமுகத்துடன் செயற்படுவதாக நான் சந்தேகிக்கின்றேன்.

பாலஸ்தீனர்களை விரட்டியதால் ஏற்பட்ட இஸ்ரேலிய தொழில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கையும் ஆட்களை அனுப்பியுள்ளது. இது ஏன்? இஸ்ரேலின் பொருளாதாரம் மற்றும் இராணுவத்தை பாதுகாக்கும் தேவை அரசாங்கத்துக்கு ஏன் ஏற்பட்டது? வெளிநாட்டமைச்சர் இதற்குப் பதலளிக்க வேண்டும். வெறும் தலையாட்டியாக இருக்காமல், இஸ்ரேலின் வெறித்தனங்களை அரசாங்கம் கண்டிப்பது அவசியம்.

சொந்தமண்ணிலிருந்து பாலஸ்தீனர்கள் வெளியேற்றப்பட்ட "நக்பா" தினத்தில், நான் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். சர்வதேச நியதிக்கு உடன்பட்டு பாலஸ்தீனை அங்கீகரியுங்கள். இஸ்ரேலின் இன ஒழிப்புச் செயற்பாடுகளை ஆதரிக்கும் வகையில், இலங்கை செயற்படக்கூடாது.

தர்மமின்றி, இனவெறியோடு தலைவிரிகோலமாக தாண்டவமாடும் யூத இராணுவம் முழு பாலஸ்தீனையுமே அழிக்கத் துடிக்கிறது.

பதிலடிப்போரென்ற போர்வையில் பெண்கள், குழந்தைகள், முதியோர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் நிரபராதிகள் அனைவரையும் சல்லடைகளால் துளைக்கிறது இஸ்ரேல். வைத்தியசாலைகள், அகதிமுகாம்கள் இன்னும் நிவாரண நிலையங்களும் விமானத்தாக்குதல்களால் தகர்க்கப்படுகின்றன.

அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய அரசுகளின் ஒருதலைப்பட்ச போக்குகள், ஜனநாயகத்துக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. வீட்டோ அதிகாரத்தால் இஸ்ரேலைப் பாதுகாக்கும் அமெரிக்கா, பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களையோ அல்லது மனிதாபிமானத்தையோ கண்டுகொள்ளவில்லை" எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ஜனாதிபதி – எலன் மாக்ஸ் சந்திப்பு



உலகின் முன்னணி செல்வந்த வர்த்தகரான டெஸ்லா நிறுவனம் மற்றும் X சமூக வலைத்தளம் ஆகியவற்றின் உரிமையாளர் எலன் மாக்ஸ்ஸிற்கும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தோனேசியாவில் நடைபெறும் 10ஆவது உலக நீர் மன்றத்தின் உயர்மட்ட கூட்டத்தின் போதே இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையில் Starlink நடைமுறைப்படுத்துவது குறித்து ஜனாதிபதி, எலன் மாக்ஸ்ஸுடன் கலந்துரையாடியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் ஞவயசடமைெ வலையமைப்புடன் இலங்கை இணைவதற்காக விண்ணப்பிக்கும் நடவடிக்கை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

இந்த கலந்துரையாடலில் அமைச்சர் ஜீவன் தொண்டமானும் கலந்துகொண்டுள்ளார்.

இலங்கையின் மீட்சி, பொருளாதார ஆற்றல் மற்றும் முதலீட்டுக்கான புதிய வாய்ப்புகள் குறித்து ஜனாதிபதியும் எலோன் மாக்ஸும் கலந்துரையாடியதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான், தனது X வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# புத்தளம் ஆண்டிமுனை பாடசாலைகளுக்கு புதிய கட்டிடங்களுக்கான இரண்டாம் கட்ட நிதி வழங்கும் நிகழ்வு



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தின் ஆண்டிமுனை தமிழ் வித்தியாலயம், பத்துளுஓயா சிங்கள பாடசாலை மற்றும் தாராவில்லு முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளில் புதிதாக நிர்மாணிக்கப்படும் கட்டிட நிர்மாணப் பணிகளுக்கான இரண்டாம் கட்ட நிதி வழங்கும் நிகழ்வு திங்களன்று (13) இடம்பெற்றன.

புத்தளம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆறு பாடசாலைகளில் தலா 38 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்படவுள்ளன.

வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், பொதுஜன பெரமுன முன்னணியின் புத்தளம் மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கான அமைப்பாளருமான ஏ.எச்.எம்.றியாஸின் வேண்டுகோளுக் கிணங்க, கொழும்பு சயிதா பவுண்டேஷன் அமைப்பின் பணிப்பாளரும், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நௌஸர் பௌசி குறித்த கட்டிடங்களுக்கான நிதியை ஒதுக்கியுள்ளார்.

இதன்படி, கடையமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி, ஆண்டிமுனை தமிழ் வித்தியாலயம், தாராவில்லு முஸ்லிம் வித்தியாலயம், பத்துளுஓயா சிங்கள பாடசாலை, மாரவில சிங்கள பாடசாலை மற்றும் ஆராச்சிகட்டுவ ஆகிய பாடசாலைகளுக்கு இவ்வாறு தலா 38 இலட்சம் பெறுமதியான கட்டிடம் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கான முதற்கட்ட நிதியாக தலா 15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி ஆறு பாடசாலைகளில் ஆண்டிமுனை தமிழ் வித்தியாலயம், பத்துளுஓயா சிங்கள பாடசாலை மற்றும் தாராவில்லு முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளுக்கு இரண்டாம் கட்ட நிதியாக தலா 13 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளன.

குறித்த இரண்டாம் கட்ட நிதி வழங்கும் நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எச்.எம். றியாஸின் அழைப்பின் பேரில் சயிதா பவுண்டேஷன் அமைப்பின் பணிப்பாளரும், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நௌஸர் பௌஸி பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், மறைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேராவின் பாரியாரும், சட்டத்தரணியுமான சமரி பிரியங்கா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# பலவகையிலும் முன்மாதிரிமிக்க பிராந்திய ஊடகவியலாளராக திகழ்ந்தவர் மர்ஹூம் எம்.ரீ.ஏ. கபூர்

## அனுதாபச்செய்தியில் ஸ்ரீலங்கா மீடியா போரம்

SLMMF

திகாமடுல்ல மாவட்டத்தில் நீண்ட காலம் பத்திரிகைத் துறையில் பணிபுரிந்த நிந்தவூரைச் சேர்ந்த முஹம்மட் தம்பி அப்துல் கபூர் பலவகையிலும் முன்மாதிரிமிக்க பிராந்திய ஊடகவியலாளராகப் செயற்பட்ட ஒருவராவார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை காலமான கபூரின் ஜனாஸா நிந்தவூரில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

போக்குவரத்து சபை ஊழியராக பணிபுரிந்த இவர், பதவியில் ஓய்வு பெற்றபின் முழு நேரமும் ஊடகத்துறையில் ஈடுபட்டிருந்தார்.

பல வருட காலமாக தினகரன் பத்திரிகையின் பிராந்திய ஊடகவியலாளராகப் பணிபுரிந்த இவர், பத்திரிகை ஆசிரியர்களின் அபிமானத்தை வென்றெடுத்த பிராந்திய ஊடகவியலாளராகத் திகழ்ந்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் மூத்த உறுப்பினராக இருந்த இவர், பிராந்திய ஊடக அமைப்புகளிலும் முக்கிய பதவிகளை வகித்தார்.

இவரது மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ள அதேவேளை, இவரது மறுமை வாழ்வுக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டிக் கொள்வதோடு, இவருடைய குடும்பத்தினருக்கு வல்ல இறைவன் மன ஆறுதலை அளிக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறது.

# முல்தஸம் ஹஜ் ட்ரவல்ஸினால் "ஹாஜிகளின் தோழன்" நூல் வெளியீடு



(நூருல் ஹுதா உமர்)

2024 ஆண்டில் முல்தஸம் ஹஜ் ட்ரவல்ஸின் ஊடாக புனித ஹஜ் யாத்திரை செல்பவர்களுக்கான கருத்தரங்கும் ஹாஜிகளை வழிகாட்டக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ள ஹாஜிகளின் தோழன் என்ற புத்தகத்தின் மீள் வெளியீட்டு நிகழ்வும் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் மௌலவி எம்.எஸ். எம். சுஹைர்தீன் தலைமையில் 2024.05.13 ஆம் திகதி இடம்பெற்றது.

முல்தஸம் ஹஜ் ட்ரவல்ஸின் நிறைவேற்று பணிப்பாளர் அல் ஹஜ் எம்.எஸ்.எப்.ஆர். முகத்தஸி அவர்களின் வழிகாட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மௌலவி எஸ். எல். பரீட், மௌலவி சஹ்றான், மௌலவி ரயீஸ் முப்தி மற்றும் மௌலவி சபா மொகமட் அல் நஜாஹி முகத்தமுல் காதிரியி ஆகியோரும் மார்க்க சொற்பொழிவாற்றினர்.

ஹாஜிகளின் தோழன் புத்தகம் தொடர்பில் முன்னாள் கணக்காளர் ஐ.எல்.எம்.பாறூக் அவர்கள் உரையாற்றினார் அதேவேளை நூல்களின் பிரதிகளை அதிதிகளுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

# 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

நாடளாவிய ரீதியில் நிலவும் சீரற்ற காலநிலையையடுத்து 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இன்று (19) அதிகாலை 03.00 மணி முதல் நாளை (20) அதிகாலை 03.00 மணி வரை அமுலாகும் வகையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்தார். அதன்படி, பதுளை மாவட்டத்தின் எல்ல பிரதேச செயலகங்களுக்கு 02 ஆம் கட்டத்தின் கீழ் எச்சரிக்கை அறிவிப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.

பதுளை மாவட்டத்தின் மேலும் 04 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் கண்டி, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களின் 33 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் முதலாம் கட்டத்தின் இன் கீழ் மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர மேலும் தெரிவித்தார்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்)
வெளிவருகின்ற "உதயம்"
பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.
editor.uthayam@gmail.com

## மனநலமும் ஆலோசனையும் 31

# தவறான புரிதல்கள்

தொடர்பாடல் என்பது மனித வாழ்வின் அடிப்படையாகும். சிறந்த தொடர்பாடலில் இருந்து தான் சிறந்த உறவுகள் தோற்றம் அடைகின்றன. ஆரோக்கியமான தனிப்பட்ட உறவுகளை, குழு உறவுகளை வளர்ப்பதற்கான ஒரு கருவியாக இருப்பது சிறந்த தொடர்பாடல்.

இது எம்மிடம் இருக்க வேண்டிய ஒரு முக்கியமான திறனாகும். ஆனால் துரதிருஷ்டவசமாக இது நம்மில் பலருக்கு இருப்பதில்லை, இதன் விளைவாக நாம் தவறான புரிதலின் எளிதான இலக்குகளாக இலகுவாக மாறி விடுகிறோம். "நான் அதைச் சொல்லவில்லை, நீங்கள் தவறாகப் புரிந்துகொண்டீர்கள்" என்று மக்கள் சொல்வதைக் வழக்கமாக கேட்டுப் வருகிறோம்.

யாரையாவது அல்லது எதையாவது தெளிவாகப் புரிந்து கொள்ளாததன் விளைவு தவறான புரிதலில் முடிவடைகிறது.

கருத்து வேறுபாடு, கருத்து முரண்பாடு எல்லாம் இந்த தவறான புரிதல்களின் மூலத்தில் இருந்தே உருவாகின்றன.

நாம் மற்றவர்களை எப்படி, ஏன் தவறாகப் புரிந்துகொள்கிறோம் மற்றும் மற்றவர்களால் ஏன் தவறாக புரிந்து கொள்ளப்படுகிறோம் என்பதை விளக்கும் பல காரணிகள் இருக்கலாம்.

வீட்டிலும் சரி. பணியிலும் சரி தவறான தகவல் தொடர்புகள் அடிக்கடி நிகழலாம், இது தவறான புரிதல்களுக்கு வழிவகுக்கலாம். அதன் பின்னர் மோதல்கள், பிரிவுகள் போன்ற தகாத விளைவுகளை ஏற்படுத்தலாம்.

கடைசியாக இது முன்னேற்றத்திற்கும் உற்பத்தித்திறனுக்கும் பல தீங்குகளையும் விளைவித்து விட காரணமாகலாம்.

தவறான தகவல்தொடர்புகளுக்குப் பின்னால் உள்ள பொதுவான காரணங்களைப் புரிந்துகொள்வது முக்கியமானது.

- வேலையில் தவறான தொடர்பாடல்கள்
- தெளிவற்ற தகவல்கள் பரிமாற்றம்
- விடயங்களை சரியாக செவிமடுக்கும் திறன் இல்லாமை
- அப்படி இருக்குமமோ.. இப்படி இருக்குமோ... என்று அனுமானித்தல்
- மொழி மற்றும் வசனத் தடைகள்
- தொழில்நுட்பக் கோளாறுகள்
- பிழையான செய்திகளை ஆராயாமல் நம்புதல்

போன்ற விடயங்கள் தவறான புரிதல்களுக்கு முக்கிய காரணங்களாக அமையலாம்.

தவறான புரிதல்கள் மனித தொடர்புகளில் அடிக்கடி நிகழலாம், ஏனென்றால் ஒவ்வொருவரும் அவரவர் வாழ்க்கைச் சூழ்நிலைகளை வைத்தே விடயங்கள் பற்றி நேக்குகிறார்கள், அவ்வாறே அவற்றை முன்வைக்கவும் முற்படுகிறார்கள்.

நமது வாழ்க்கை அனுபவங்கள், அடிப்படை நம்பிக்கைகள் ஒரு விடயத்தை விளங்கிக் கொள்ளும் முறைகள் எல்லாம் நபருக்கு நபர் மாறுபடும்.

பணியிடத்தில் உள்ள தவறான புரிதல்களை எவ்வாறு தீர்ப்பது என்பதைக் கற்றுக் கொள்வதும் அது பற்றி ஆழமாகவும் அறிவுபூர்வமாகவும் சிந்தித்து சரியான முடிவுகளை எடுப்பதற்கான நுட்பங்களை தேடித் தெரிந்து கொள்வதும் ஒரு பணியாளரின் பொறுப்பாகும்.

அதேவேளை தவறான புரிதல்களால் ஏற்படும் மோதலைத் தீர்க்கும் நுணுக்கங்களைத் தெரிந்துகொள்ள எங்களுக்கு உதவக்கூடியவர்களிடம் பேசித் தெரிந்து கொள்வதில் நாம் பின்வாங்கி நிற்கவும் கூடாது. தவறான புரிதல்களை அழகாக வெற்றி கொண்ட பல அனுபவசாலிகள் எங்கள் அருகில் இருக்கலாம். அவர்களுடன் உரையாடலாம்.

புரிதல் என்பது எல்லோராலும் வளர்த்துக் கொள்ள முடியுமான ஒரு திறன். அதனால் இந்த அழகான திறனை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்வோம்.

(இதை வாசிக்கும் போது நீங்கள் என்ன உணர்கிறீர்கள்?

இதன் உட்கருத்து எந்த தகவல்களை உங்களுக்கு தருகின்றன? என்று சிந்தித்துப் பாருங்கள்)



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# RPSL இன் வருடாந்த பொதுக் கூட்டம்





**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

இலங்கையில் மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்தும் கூட்டமைப்பு (RPSL) இன் இரண்டாவது வருடாந்த பொதுக்கூட்டம் நேற்று தெஹிவளை –கல்கிஸ்ஸை பெர்ஜயா ஹோட்டலில் நேற்று (19) நடைபெற்றது.

கூட்டமைப்பின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் செயலாளர் டொக்டர் ஸ ாமிலா தாவூத்இ பொருளாளர் எம்.எம். என்.முனவ்வராஇ பிரதித் தலைவர்களான பேராசிரியர் எம்.எஸ்.எம்.அஸ்லம்இ வஸ ீர் முக்தார்இ சாயிப் ஹனீபா ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

அகில இலங்கை ரீதியாலான அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். புதிய ஆண்டுக்கான அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் இலங்கையில் எதிர்காலத்தில் சமாதானத்தை ஏற்படுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டமைப்பின் கடந்த வருட செயற்பாடுகள் குறித்த அறிக்கையை பொதுச் செயலாளர் டொக்டர் ஸாமிலா தாவூத் சமர்ப்பித்தார்.

இக்கூட்டமைப்பில் அங்கத்தவர்களான பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம்இ கொழும்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் ஒமர் காமில் முன்னாள் அமைச்சர் பேரியல் அஸ்ரப் ஆகியோர்களும் கலந்து கொண்டனர்.

# கட்டுகட்டுகஸ்தோட்டை வைத்தியசாலைக்கு நவீன ரக கட்டில் வழங்கி வைப்பு



**(இக்பால் அலி)**

இந்தியா நாட்டின் நியூ டில்லியில் அமைந்துள்ள இலங்கைக்கான உயர் ஸ்தானிகராயலத்தின் கவுன்சிலர் வைத்தியர் அன்வர் ஹம்தானி அவர்களின் அனுசரணையுடன் கண்டி பள்ளிவாசல்கள் சம்மேளனம் மற்றும் கொரோனா செயலணி அமைப்பினால் அக்குறணை கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையின் அவசர சிகிக்கைப் பிரிவுக்கு நவீன வசதிகளைக் கொண்ட கட்டிலை வழங்கி வைக்கும் வைபவம் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்தியசாலையின் பணிப்பாளர் இரந்த தலைமையில் இடம்பெற்றது.

கண்டி பள்ளிவாசலகள் சமேளனத்தின் தலைவர் கே. ஆர். சீத்தீக் தலைமையிலான குழுவினர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் இரந்த அவர்களிடம் உத்தியோகபூர்வமாக கைளித்தனர்

இதன் போது முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார், வைத்தியாலையின் சுகாதார அதிகாகளி. பள்ளிவாசல் சம்மேளனத்தின் செயலாளர் என். எம். எம். மன்சூர், உப தலைவர் ரீஸா வாஹிட், உப செயலாளர் மௌலவி ஸக்கி, கட்டுகஸ்தோட்டை ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள். கொரோனா செயலணி அமைப்பின் உறுப்பினர் எச். எல். ஏம். இல்ஹாம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஹிமா பெண்கள் நலன்புரிச் சங்கத்தின் சிறுவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு





**(அஷ்ரப் ஏ சமத்)**

ஹிமா பெண்கள் நலன்புரிச் சங்கத்தின் சுயுஆுயுடே ளுீநுஊஐயுடு யுறுயுசுனு நிகழ்ச்சியின் சிறுவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு மற்றும் பெண்களுக்கான வினா விடை போட்டியில் வெற்றி பெற்ற மகளிர் மற்றும் மாணவிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு (18) நீர்கொழும்பு மாநகர கேட்போர் மண்டபத்தில் ஹிமா பெண்கள் நலன்புரிச் சங்கத்தின் தலைவி ஆசிரியை நஸ்மின் நஸ்மியா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பிணர் டொக்டர் காவிந்த ஜெயவர்த்தன. கௌர அதிதியாக முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரப் அவர்களும் மற்றும் ஹூ சைன் பௌன்டேசன் தலைவர் ஹூசைன் போல்ட், முன்னாள் மேல்மாகான சபை உறுப்பிணர் இப்திக்கார் ஜெமீல், நீர்கொழும்பு காதிநீதிபதி, பாடசாலை அதிபர்கள், முன்னாள் அதிபர்களும் கலந்து சிறப்பித்தனர்.

அத்துடன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகள் மற்றும் மகளிர்களுக்கான விருதுகள், பரிசுப்பொருட்கள் சான்றிதழ்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் ஹிமான அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் ஹிமாவின் வேலைத் திட்டங்களுக்காக உதவிகளை மேற்கொண்டவர்களுக்குமான கௌரவிப்புக்களும் வழங்கப்பட்டது.

# "விழித்தெழு பெண்ணே" சர்வதேச மகளிர் அமைப்பின் உலகளாவிய தமிழ்ப்பெண் ஆளுமைகளின் விருது விழா




கனடா நாட்டின் "விழித்தெழு பெண்ணே" சர்வதேச மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் தொடர்ந்தும் மூன்றாவது முறையாக நடைபெற்ற " உலகளாவிய தமிழ்ப்பெண் ஆளுமைகளின் விருது விழா 2024 " கண்டி Golden Crown விருந்தகத்தில் பெரும் விழாவாக கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்றது .

இதில் பின்வரும் துறைகளை சார்ந்த சுமார் 153 பெண் சாதனையாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர் .

- கலை மற்றும் இசைத்துறை
- ஊடகத்துறை
- பெண் தொழில்முனைவோர்
- விளையாட்டுத்துறை
- அரசாங்க மற்றும் தனியார் துறைசார் வல்லுனர்கள்
- சமூகநல விரும்பிகள்
- சுகாதாரம் மற்றும் வைத்தியத்துறை
- விசேட சாதனைப் பெண்கள்
- ஃபேஷன் மற்றும் அழகுக்கலை
- கலாச்சாரம் மற்றும் கல்வித்துறை
- இளம்பெண் தொழில்முனைவோர்

அனுபவமிக்க நடுவர் குழாமின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பெண் சாதனையாளர்களை தமிழ் கலாச்சார விழுமியங்களை பின்பற்றி மேளதாளத்துடன் அரங்கத்துக்குள் வரவேற்று கௌரவிப்பு இடம்பெற்றதுடன் சாதனையாளர்களுக்கு மதிப்புமிக்க சான்றிதழ்களும் சாதனை சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டது .

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வருகைதந்த நடன தாரகைகளின் நடனங்கள் மற்றும் செவிக்கு இதமான பாடல்கள் வழங்கிய பாடகிகளின் குரல்கள் நிகழ்வுக்கு பக்கபலமாக அமைந்தது சிறப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

விழாவுக்கான சிறப்பு விருந்தினராக இலங்கைக்கான கனேடிய தூதுவர் கௌரவ நுசளை றுயடளா அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் நிகழ்வுக்கான விசேட விருந்தினர்களாக இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் , நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வே ராதாகிருஷ்ணன் , கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரின் இணைப்பு செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ் , ஐக்கிய மக்கள் சக்தியின் உப செயலாளர் உமாசந்திர பிரகாஷ் ஆகியோருக்கு கலந்து இவ் விழாவை சிறப்பித்திருந்தனர்.

விழாவின் நாயகிகளாக, தங்கள் துறைகளில் சாதனை படைத்து,நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் வருகைதந்திருந்த 150 பெண்கள் 2024 ஆண்டுக்கான சாதனை பெண்களாக அடையாளம் காணப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# இலங்கை வந்த Silver Could அதி சொகுசு யணிகள் கப்பல்!




(எம்.எம். ஜெஸ்மின்)

Silver Could அதி சொகுசு பயணிகள் கப்பல் கடந்த புதனன்று (15) அதிகாலை 2.30 மணியளவில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது.

சுமர் 600 பயணிகளைக் கொண்ட ளுடைஎநச ஊழரடன பயணிகள் கப்பலானது நேற்று பி.ப. 6 மணிக்கு ஹம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து வியானன்று (16) அதிகாலை 6 மணிக்கு காலி துறைமுகத்தை வந்தடைந்தது.

தரிப்பிட வசதிகருதி சுமார் 1.5 மைல் தூரத்தில் காலி துறைமுகத்திலிருந்து தரிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த கப்பலானது இன்று மாலை 6 மணிக்கு போர்ட்ப்ளையாவை நோக்கி பயணமாகவுள்ளது.

குறித்த கப்பல் Colombo Shipping தனியார் நிறுவனம் ஊடாக நாட்டுக்கு அழைத்துவரப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பணிப்பாளராக இருந்த இஸட். ஏ.எம்.பைஸல் பதவி உயர்வு பெற்று கிழக்கு மாகாண சபைக்கு உயர் பதவி ஒன்றிற்காகச் செல்வதால் திணைக்களத்தின் நலன்புரிச் சங்கத்தினால் அவருக்கான பிரியாவிடை வைபவம் நேற்று இடம் பெற்றது. இதன்போது பணிப்பாளரின் சேவையைப் பாராட்டி திணைக்கள அலுவலர்களால் அவருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டபோது. (ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# கொழும்பு 'Bcas campus" கல்லூரியின் சிறப்புப் பட்டமளிப்பு விழா

(ஐ. ஏ. காதிர் கான்)

கொழும்பு (டீஉயள உயஅிரள) "பீகாஸ் கல்லூரி" யின் சிறப்புப் பட்டமளிப்பு விழா, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், நேற்று (13) திங்கட்கிழமை இரு அமர்வுகளாக இடம்பெற்றன.

"காலை அமர்வு, மாலை அமர்வு" என நடைபெற்ற இந்த இரு அமர்வுகளின் பட்டமளிப்பு விழாக்களில், கல்லூரியின் தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர், கல்லூரியின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட ஊழியர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

காலையில் இடம்பெற்ற முதலாவது அமர்வில் முன்னாள் அமைச்சர் சரத் அமுனுகம, பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

காலை அமர்வில் கல்லூரியின் கொழும்புக் கிளை மற்றும் கல்முனைக் கிளை மாணவ மாணவிகள் பலபேர், சிறப்புச் சான்றிதழ்கள் பெற்று பட்டதாரிகளாக வெளியேறினர். இதில், கல்முனைக் கிளையிலிருந்து மாத்திரம் 160 பேருக்கும் மேற்பட்டோர், சிறப்புப் பட்டதாரிகளாக வெளியேறியமை சிறப்பம்சமாகும்.

காலை அமர்வின்போது, டீரளளைநௌள ஆயயெபநஅநவெ யனெ ஏழகவறயசந நபெைநெநச

ஆகிய பாட நெறிகளை மிக வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் நற்சான்றிதழ்களும் வழங்கப்பட்டு பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

காலை அமர்வில் இடம்பெற்ற இச்சிறப்புப் பட்டமளிப்பு விழாவில், கல்லூரியின் கல்முனைக் கிளை முகாமையாளர் மொஹமட் இஸ்ராக் காலிதீன் உட்பட ஊழியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



பயாஸா பாஸில்




# வாய்ப்புக்களை பயன்படுத்துங்கள்...

கை நழுவிப் போகும் வாய்ப்புக்கள் எத்தனையோ... அதற்காக அதே இடத்தில் நின்று கொண்டிருப்பது முட்டாள்தனம்.

ஒவ்வொரு வாய்ப்புக்களையும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போது தான் எமது திறமைகளை வெளிப்படுத்தி எம்மாலான செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லலாம். வாழ்வில் முன்னேறலாம்.

வெற்றி பெறலாம்.

எந்த சின்ன வாய்ப்பாக இருந்தாலும் அதனை தவற விடக்கூடாது. அதே வாய்ப்பு மீண்டும் அமையப் பெறும் என்பதில் என்ன நிச்சயம்..?? தவற விட்டு பின் வருந்தி என்ன பயன்..?!

எனவே கிடைக்கும் வாய்ப்புக்களை சரிவர பயன்படுத்தி வாழ்வில் வெற்றி பெற முயற்சிப்போம்...!!

# ஆரோக்கியம் பெற நடைப்பயிற்சி செய்யுங்கள்...

தினமும் 10 நிமிடங்கள் தொடக்கம் 1 மணித்தியாலம் வரை நடக்க முடியுமா..??

பின்னர் என்ன கவலை..? நீங்கள் தேகாரோக்கியமானவர் தான்.

"நடத்தல்" என்பது பெரும்பாலும் குறைந்து கொண்டே செல்கின்ற ஒரு நடவடிக்கையாக அமைந்திருக்கின்றது.. எதற்கெடுத்தாலும் வாகனம் தேடும் சமூகமாக நாம் மாறி வருகின்றோம். சின்ன ஒரு பயணமாக இருந்தாலும்... அதற்கும் ஒரு மோட்டார் பைக் தேவைப்படுகிறது.

நன்றாக உண்கிறோம் , ஆடை அணிகலன்களை அணிகிறோம் , உறங்கி ஓய்வெடுக்கிறோம் இவற்றாலெல்லாம் எமது உடல் அழகு பெறும் என நம்புகிறோம்.


இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதனால் நாம் ஆரோக்கியத்தை முழுமையாக பெற்றுக் கொள்ள முடியாது.

உடற்பயிற்சியும் கட்டாயம் தேவைப்படுகிறது. உடற்பயிற்சியுடன் கூடிய சீரான உணவுப்பழக்கமும் தேவைப்படுகிறது.

நீண்ட தூரம் நடத்தலும் உடற்பயிற்சியே....!!!

நீண்ட தூரம் நடப்போம்...!

தேகாரோக்கியம் பெறுவோம்...!



# இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடர்

## ஸ்வெரோவ் மற்றும் ஜாரி இறுதியில் பலப்பரீட்சை



அரபாத் பஹுர்தீன்

உலகப்புகழ் பெற்ற இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடரின் அரையிறுதிப் போட்டியில் சிலி நாட்டின் அலிஜான்ரோ டபிலோவை போராடி வீழ்த்திய ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரோவ் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

உலக டென்னிஸ் தொடர்களில் விம்பில்டன் மற்றும் அவுஸ்திரேலிய ஓபன் தொடர்களுக்கு அடுத்த படியாக அதிக போட்டிகளைக் கொண்ட தொடரான இத்தாலி ஓபன் தொடர் ஆடவர் ஒற்றையர் மற்றும் இரட்டையர், மகளிர் ஒற்றையர் மற்றும் இரட்டையர் ஆகிய நான்கு பிரிவுகளாக இடம்பெறுகின்றது. இத் தொடர் இம்மாதம் 6ஆம் திகதி ஆரம்பித்து இன்றுடன் நிறைவடையவுள்ளது.

இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவின் முதல் 3 சுற்றுக்கள் மற்றும் காலிறுதி போட்டிகளின் நிறைவில் முதல் அரையிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் டாவி பாலினை 6:3 , 6:7, 6:3 என்ற செட்களில் வீழ்த்திய சிலி நாட்டின் நிகோலஸ் ஜாரி முதல் வீரராக இறுதிப் போட்டிக்குள் கால்பதித்தார்.





பின்னர் இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் போட்டியில் சிலி நாட்டின் அலிஜான்ரோ டபிலோவை ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரோவ் ஆகியோர் மோதினர். இப்போட்டியின் முதல் செட் ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய சிலியின் அலிஜான்ரோ 6:1 என மிக இலகுவாகக் கைப்பற்றி முன்னிலை பெற்றார்.

பின்னர் இடம்பெற்ற 2ஆவது செட்டில் சுதாகரித்து ஆடிய ஜேர்மனியின் ஸ்வெரோவ் 7:6 என போராடி வெற்றி கொள்ள போட்டி 1:1 என சமநிலை பெற்றது. பின்னர் தொடர்ந்த தீர்மாணமிக்க 3ஆவது செட்டில் ஆக்ரோஷ மிக்க ஆட்டத்தை வெளிப்படுத்திய அலெக்ஸாண்டர் ஸ்வெரோவ் மிக இலகுவாக 6:2 என கைப்பற்றிக் னெகாள்ள முழுநேர ஆட்டம் 1:6, 7:6, 6:2 என ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரோவ் வசமானதுடன் அவர் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று அசத்தினார்.

இதற்கமைய நடப்பாண்டின் இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடரின் இன்று (19) இடம்பெறவுள்ள இறுதிப் போட்டியில் சிலியின் ஜாரி மற்றும் இத்தாலியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரோவ் ஆகியோர் மோதவுள்ளதுடன் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் ஸ்வியாடெக் மற்றும் ஸபலென்கா ஆகியோர் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்கள் பட்டியலில் ரொனால்டோ தொடர்ந்தும் முதலிடம்



அமெரிக்காவின் புகழ்பெற்ற போர்ப்ஸ் பத்திரிகை ஆண்டுதோறும் அதிக சம்பளம் பெறும் விளையாட்டு வீரர்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுக்காக வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் தொடர்ந்து 4ஆவது முறையாகவும் கால்பந்தாட்ட நட்சத்திரமான கிறிஸ்டியானோ ரொனால்டோ முதலிடத்தை பிடித்துக் கொண்டுள்ளார்.

போர்த்துக்கல் உதைப்பந்தாட்ட அணியின் வீரரும் முன்னால் ரியல் மெட்ரிட் கழகத்தின் அணித்தலைவருமான கிறிஸ்டியானோ ரொனால்டோ தற்போது சவுதி அரேபியாவின் அல் நஸர் கால்பந்து அணிக்காக விளையாடி வருகிறார். போர்ப்ஸ் பத்திரிகையின் தகவல்படி 39 வயதான கிறிஸ்டியானோ ரொனால்டோ 260 மில்லியன் டொலர் சம்பளம் வாங்குவதாக குறிப்பிட்டுள்ளது. கடந்த 12 மாதங்களில் அவருடைய சம்பளம் 136 மில்லியன் டொலரில் இருந்து 260 மில்லியன் அடாலராக உயர்ந்துள்ளது.

மேலும் மற்றைய உலகப் புகழ்பெற்ற உதைப்பந்தாட்ட நட்சத்திரமான ஆர்ஜன்டீனா அணியின் தலைவரும் முன்னால் பரார்சிலோனா மற்றும் பி.எஸ்.ஜி அணியின் வீரரும் தற்போதைய அமெரிக்க கழக வீரருமான லயோனல் மெஸ்ஸி கடந்த பட்டியலில் 2ஆவது இடத்தில் இருந்தார். இருப்பினும் இவ்வாண்டுக்கான பட்டியலில் ஒரு இடம் சரிந்து 3ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார். அவருடைய நடப்பாண்டின் சம்பளமாக 135 மில்லியன் டொலர் பதிவாகியுள்ளது.

இத் தரப்படுத்தலில் 2ஆவது இடத்தில் கோல்ஃப் வீரரான ஜான் ரஹ்ம் 218 மில்லியன் டொலருடன் முன்னேறியுள்ளார். 4ஆம் மற்றும் 5ஆம் இடங்களில் கூடைப்பந்து வீரர் லே பிரோன் ஜேம்ஸ் (128.2 மில்லியன் டொலர்), மற்றுமொரு கூடைப்பந்து வீரரான ஜியான்னிஸ் ஆன்டேடோகவுன்ம்போ (111 மில்லியன் டொலர்) இடம்பெற்றுள்ளனர்.

மற்றுமொரு கால்பந்தாட்ட வீரரான பிரான்ஸின் எம்பாப்வே 110 மில்லியன் டொலருடன் 6ஆவது இடத்தையும் பிரேஸில் கால்பந்து நட்சத்திரமான நெய்மர் 108 மில்லியன் டொலர்களுடன் 7ஆவது இடத்திலும் உள்ளனர். 8 முதல் 10ஆவது இடங்களில் முறையே கரிம் பென்சிமா (கால்பந்து) 106 மில்லியன் டொலர், ஸ்டீபன் கர்ரி (கூடைப்பந்து) 102 மில்லியன் டொலர், லாமர் ஜேக்சன் (அமெரிக்க கால்பந்து) 100.5 மில்லியன் டொலருடன் இத் தரப்படுத்தலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# லங்கா புட்போல் கப் - 2024: இறுதிப் போட்டியில் மோதும் கண்டி மற்றும் காலி அணிகள்

லங்கா புட்போல் கப் -2024 இன் தீர்மானிக்க இறுதிப் போட்டியில் சம பலமிக்க இரு அணிகளான கண்டி மற்றும் காலி அணிகள் இன்று பலப்பரீட்சை நடாத்துகின்றன.

லங்கா ஸ்போர்ட்ஸ் குரூப் இலங்கையில் உதைப்பந்தாட்ட விளையாட்டை மேம்படுத்தும் முயற்சியில் இலங்கை உதைப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து லங்கா லங்கா புட்போல் கப்- 2024 ஐ ஆரம்பித்துள்ளது. இதில் இலங்கை உதைப்பந்தாட்டத்தில் முன்னனி வகிக்கும் கழகங்களும், வீரர்களும் பங்கேற்கின்றனர். அதற்கமைய இதில் 8 அணிகள் போட்டியிடுகின்றன. இதற்கமைய விலகல் முறையில் அமைக்கப்பட்ட அட்டவணைக்கு அமைய கடந்த வாரம் இடம்பெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாண அணியை 5:0 என்ற கோல்கள் அடிப்படையில் வீழ்த்திய கண்டி அணி முதல் அணியாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

பின்னர் இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் போட்டியில் இலங்கையின் முதல்தர கழகமாக கொழும்பு எப்.சி யை எதிர் கொண்டது காலி அணி. மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியின் முதல் பாதியில் கொழும்பு எப். சி அணி முதல் கோலை செலுத்தி ஆதிக்கம் செலுத்திய சிறிது நிமிடத்தில் கடும் மழை காரணமாக போட்டி நிறுத்தப்பட்டது.

பின்னர் அடுத்த நாள் நிறுத்தப்பட்ட நிமிடங்களில் இருந்து தொடங்கப்பட்ட ஆட்டத்தின் முழு நேர முடிவில் காலி அணி 2:1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றியைப் பதிவு செய்து இறுதிப் போட்டிக்குத் தெளிவானது.

அதற்கமைய இன்று (19) பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பு சிட்டி மைதானத்தில் இடம்பெறவுள்ள தீர்மானிக்க இறுதிப் போட்டியில் சம பலமிக்க கண்டி மற்றும் காலி அணிகள் பலப்பரீட்சை நடாத்தவுள்ளன. மேலும் இத் தொடரின் சம்பியன் மகுடத்தை பெறும் அணிக்கு பரிசுத் தொகையாக 10 லட்சம் ரூபாய்களும், 2ஆம் இடம்பெறும் அணிக்கு 5 லட்சம் ரூபாய்களும் வழங்கப்படவுள்ளன.




# நாளை மறுதினம் LPL ஏலம்

5ஆவது லங்கா பிரீமியர் லீக் ரி20 தொடரின் வீரர்கள் ஏலம் எதிர்வரும் 21ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளஇவ் ஏலத்தில் 420 வீரர்கள் பங்கேற்கவுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

நடப்பாண்டிற்கான லங்கன் பிரீமியர் லீக் ரி20 தொடர் எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இத் தொடருக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. இவ்வேலம் நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. இதனை கடந்த ஆண்டைப் போல இம்முறையும் இந்தியாவின் பிரபல்யமிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளரான சாரு ஷர்மா தொகுத்து வழங்கவுள்ளார்.

இவ் வீரர்கள் ஏலத்தில் மொத்தம் 420 வீரர்கள் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதுடன், 18 சுற்றுகளைக் கொண்டதாக இடம்பெறும் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதில் 154 வீரர்கள் இலங்கை வீரர்கள் என்றும், எஞ்சியுள்ள 266 வீரர்கள் வெளிநாட்டு வீரர்கள் என்றும் இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 5ஆவது லங்கன் பிரீமியர் லீக் தொடருக்கான வீரர்களின் ஏலத்தில் 600க்கும் மேற்பட்ட வெளிநாட்டு வீரர்கள் பதிவு செய்திருந்த போதிலும், அதிலிருந்து 266 வீரர்களே தெரிவு செய்யப்பட்டதாக லங்கன் பிரீமியர் லீக் தொடரின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.